# பொருளாதாரச் செயலாற்றம், பிரச்சினைகள், கொள்கைகள்—1987

## அறிமுகம்

இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றத்தில் 1987 ஆம் ஆண்டு கணிசமான பின்னடைவினைக் கொண்டிருந்தது. உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1977 இன் பொருளாதார சீராக்கங்களின் பின் ஏற்பட்ட ஆகக் குறைந்த மட்டமாகும். 1977—1986 வரையான 10 ஆண்டுகளின் போதான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரி வளர்ச்சி வீதம் 5.5 சதவீதமாகும். அதேவேளை வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் உட்பாய்ச்சலுக்கு இடமளித்த பின்னர் பெறப்படும் நிலையான (1982) விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 1987 இல் 1.6 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது. இது முந்திய ஆண்டின் 4.5 சதவீதங் கொண்ட உண்மையான மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடத்தக்கது.

அட்டவணை 1.1

**தேசிய வருமானப் புள்ளி விபரங்கள் 1985 — 1987**

| விடயம் | தொகை (ப.இ.ரூபாய்களில்) | | | வளர்ச்சிவீதம்% | |
|---|---|---|---|---|---|
| | 1985 | 1986* | 1987* | 1986 | 1987 |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ உ. ... | 148,321 | 163,713 | 177,731 | 10.4 | — |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ.உ.உ. ... | 109,570 | 114,261 | 115,922 | 4.3 | 8.6 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. .. | 144,921 | 159,852 | 173,395 | 10 3 | 1.5 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ.தே. உ. .. | 106,741 | 111,565 | 113,307 | 4.5 | 8.6 |
| 5. நடு ஆண்டுக் குடித்தொகை ('000) .. | 15.837 | 16,117 | 16,361 | 1.8 | 1.5 |
| 6. தலைக்குரிய மொ. தே. உ. | | | | | |
| (அ) நடைமுறை விலைகளில் (ரூபாய்களில்) .. | 9,151 | 9,918 | 10,598 | 8.4 | 6.9 |
| (ஆ) நிலையான (1982) விலைகளில்(ரூபாய்களி | 6,740 | 6,922 | 6,925 | 2.7 | 0.1 |

* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி 1987 இல் ரூ. 17,340 கோடியாக மதிப்பிடப்பட்டு 8.5 சதவீத வளர்ச்சியைக் காட்டியது. பொருளாதாரத்தின் பொதுவான விலைமாற்றத்தினை அளவிடும் உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி 6.8 சதவீதத்தினால் உயர்வடைந்து 1986 இல் பதிவு செய்யப்பட்ட 5.5 சதவீத வளர்ச்சியைவிடச் சிறிதளவு கூடுதலாக விளங்கியது. இதன் விளைவாக நிலையான (1982) விலைகளிலான


மதிப்பிடப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி 1987 இல் ரூ. 11,330 கோடியாக அமைந்து 1.6 சதவீத வளர்ச்சி வீதத்தினைக் காட்டியது. வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட சிறு மாற்றத்தின் காரணமாக வர்த்தக மாற்று விகிதத்தின் தாக்கத்திற்குச் சீராக்கம் செய்த பின்னர் பெறப்படும் உண்மைத் தேசிய வருமானம் 2.1 சதவீதம் கொண்ட சிறிதளவு கூடிய வீதத்தினுல் அதிகரித்தது.

பதிவாளர் நாயகத்தினுல் வழங்கப்பட்ட தற்காலிக மதிப்பீடுகளின்படி 1987 இல் இலங்கையின் குடித்தொகை 1.5 சதவீதத்தினுல் அதிகரித்து 164 இலட்சமாக விளங்கியது. இவ்வடிப்படையில் நடைமுறை விலைகளிலான தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 1987 இல் ரூ. 10,598 (ஐ.அ. டொலர் 360) ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் உண்மை நியதிகளிலான தலைக்குரிய வருமானம் 0.1 சதவீதம் மட்டும் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியையே காட்டியது.

1987 இல் ஏற்பட்ட மிதமான பொருளாதாரச் செயலாற்றமானது பல்வேறு காரணிகளின் இணைந்த வெளிப்பாடாகும். அவற்றில் முக்கியமானது வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்ட முனைப்பான பின்னடைவாகும். பாதகமான வானிலையின் தாக்கம், வடக்குக் கிழக்குப் பிரதேசங்களின் தொடர்ச்சியான குழப்ப நிலைமைகள் என்பவற்றின் தாக்கத்தின் கீழ்ப் பொதுவான வேளாண்மைத் துறையின் கூட்டிய பெறுமதி 1987 இல் 8 சதவீதத்தினுல் வீழ்ச்சியுற்றது. பெருந்தோட்டப் பயிர்களில் தேயிலை மட்டும் சிறு மீட்சியைக் காட்டி 1 சதவீத உற்பத்தி வளர்ச்சியைக் கொண்டிருந்தது. இறப்பர் உற்பத்தி 11 சதவீதத்தினுலும் தெங்கு உற்பத்தி 25 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தன. உணவுப் பயிர்த்துறையில் நெல்லின் உற்பத்தி 18 சதவீதத்தினுலும், சீனி 15 சதவீதத்தினுலும் வீழ்ச்சியடைந்தது. எதிர்பார்ப்பிலும் குறைவான செயலாற்றத்தினைக் கொண்டிருந்த மற்றுமொருதுறை பணிகள் துறையாகும். இதன் கூட்டிய பெறுமதி 1986 இன் 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதத்தினுல் மட்டும் அதிகரித்தது.

1987 இன் வளர்ச்சிக்குச் சில தூண்டுதலை வழங்கிய ஏனைய துறைகளில் தயாரிப்புத்துறையும் பார்குழி, கல்லுடைத்தல் துறையும் முக்கியமானவை. தயாரிப்புத்துறையில் தனியார்துறையின் கூட்டிய பெறுமதி 13 சதவீதத்தினுல் அதிகரித்தவேளையில் அரசிற்குச் சொந்தமான கைத்தொழில்களின் பெறுமதி 3 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை ஏற்றுமதிகள் சார்ந்த வேளாண்மைச் செயல்முறை 4 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இது பெரும்பாலும் தேயிலை உற்பத்தியினை உயர்ந்த கூட்டிய பெறுமதியைக் கொண்ட உற்பத்திகளுக்கு மாற்றியதன் காரணமாக ஏற்பட்டதாகும். பொதிகளில் அடைக்கப்பட்ட தேயிலையின் உற்பத்தி இவ்வாண்டில் 15 சதவீதத்தினுல் அதிகரித்தது. தயாரிப்புத் துறையின் பொதுவான வெளியீட்டு வளர்ச்சி வீதம் 1987 இல் 7 சதவீதமாக விளங்கியது. இதில் குறிப்பிடத்தக்களவு பெரும்பகுதி தொழிற்சாலைக் கைத்தொழிலில் ஏற்பட்டதுடன் இதன் வெளியீடு இத்துறையின் மொத்த உற்பத்தியில் மிகப் பெரும் பங்கிற்குப் பொறுப்பாகவுள்ளது. மத்திய வங்கியின் கைத்தொழில் உற்பத்தி பற்றிய அளவீட்டின்படி குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைக் காட்டும் கைத்தொழில் வகைகளாகப் புடவைகளும் அணியும் ஆடைகளும், தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இரசாயனங்களும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகளும் என்பன விளங்கின. பெரும்பாலும் இரத்தினக்கல் கைத்தொழிலின் சாதகமான செயலாற்றம் காரணமாகப் பார்குழி, கல் உடைத்தல் துறையின் வெளியீடு 1987 இல் மெச்சத்தக்க அளவான 19 சதவீதத்தினுல் உயர்வடைந்தது.

# மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.2

**மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் 1985 - 1987**
**நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்**


| துறை | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986* | 1987* | 1985 | 1986 | 1987 |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... ... | 28,366 | 29,106 | 27,409 | 8.6 | 2.6 | — 5.8 |
| இதில்: | | | | | | |
| 1.1 தேயிலை ... ... | 2,759 | 2,723 | 2,750 | 2.9 | –1.3 | 1.0 |
| 1.2 இறப்பர் ... ... | 851 | 856 | 765 | –3.1 | 0.6 | –10.6 |
| 1.3 தெங்கு ... ... | 3,828 | 3,935 | 2,967 | 52.3 | 2.8 | –24.6 |
| 1.4 நெல் ... ... | 6,783 | 6,613 | 5,423 | 10.0 | — 2.5 | –18.0 |
| 1.5 ஏனையவை (ஏனைய வேளாண்மை, காட்டுத்தொழிலும் கடற்றொழிலும்) ... ... | 14,145 | 14,979 | 15,504 | 1.9 | 5.9 | 3.5 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் ... ... | 2,486 | 2,615 | 3,112 | 1.5 | 5.2 | 19.0 |
| 3. தயாரிப்பு ... | 16,193 | 17,558 | 18,748 | 5.2 | 8.4 | 6.8 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... | 3,222 | 3,225 | 3,340 | 8.0 | 0.1 | 3.6 |
| 3.2 ஏனையவை ... ... | 12,971 | 14,333 | 15,408 | 4.5 | 10.5 | 7.5 |
| 4. கட்டடவாக்கம் ... ... | 8,070 | 8,191 | 8,338 | 0.5 | 1.5 | 1.8 |
| 5 பணிகள் ... ... | 54,455 | 56,791 | 58,315 | 3.9 | 4.3 | 2.7 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 109,570 | 114,261 | 115,922 | 5.0 | 4.3 | 1.5 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... ... | –2,829 | –2,696 | –2,615 | — | — | — |
| 8. மொத்த தேசிய உற்பத்தி ... | 105,741 | 111,565 | 113,307 | 5.3 | 4.5 | 1.6 |

* தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கட்டடத்துறை முந்திய ஆண்டின் 1.5 சதவீதம் கொண்ட குறைவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 1.8 சதவீதத்தினுல் விரிவடைந்தது. மின்வலு, வாயு, நீர், நலத்துறைப் பணிகள் என்பவற்றின் வெளியீடு 1987 இல் 3 சதவீதத்தினுல் அதிகரித்தது. இத்துறையில் ஏற்பட்ட மிதமான அதிகரிப்பு பெரும்பாலும் நீரேந்து பிரதேசங்களில் மழை வீழ்ச்சி போதுமானதாக இல்லாமையினுல் நீர் மின்வலுவின் மூலம் உருவாக்கப்பட்ட மின்வலு 18 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமை காரணமாக ஏற்பட்டதாகும். மொத்த விற்பனவு, சில்லறை வர்த்தகங்களின் கூட்டிய பெறுமதி 2.8 சதவீதத்தினுல் அதிகரித்தவேளையில் வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துத்துறைகளின் கூட்டிய பெறுமதியில் 6.1 சதவீதங் கொண்ட பெருமளவு விரிவாக்கம் காணப்பட்டு வங்கித் தொழில்துறையின் முன்னேற்றகரமான செயலாற்றத்தினைப் பிரதிபலித்தது. 1987 இல் கூட்டிய பெறுமதியில் நேர்க்கணிய வளர்ச்சியினைப் பதிவு செய்த ஏனைய துறைகளாகக் குடியிருப்புக்களின் உடைமை (1.5 சதவீதம்), ஏனைய பணிகள் (2.7 சதவீதம்) என்பன விளங்கின. பொது நிருவாகம், பாதுகாப்பு என்பனவற்றின் கூட்டிய பெறுமதியில் ஏற்பட்ட விரிவாக்கம் 1986 இன் 19 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1987 இல் மிதமான 3 சதவீதமாகக் காணப்பட்டது.

## கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்




இலங்கை மத்திய வங்கி

1987 இல் மூலதன ஆக்க வீதத்தில் சிறிதளவு மிதமான தன்மை காணப்பட்டது. கையிருப்புக்களின் மாற்றத்தினை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 1986 இன் 10 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 8 சத வீதத்தினால் அதிகரித்தது. முந்திய ஆண்டினைப் போன்று மூலதன ஆக்கத்திற்கான மிகவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு அரசதுறையிலிருந்து கிடைத்தது. இதில் மொத்த மூலதன ஆக்கம் முந்திய ஆண்டில் ஏற்பட்ட 23 சதவீத அதிகரிப்பினை விடக் குறைவான அளவிலாயினும் 17 சதவீதத்தினால் விரிவடைந்தது. தனியார் துறை, அரச கூட்டுத்தாபனங்கள் ஆகிய இரண்டினதும் இணைந்த மூலதன ஆக்கம் 1987 இல் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தில் 76 சதவீதத்திற்கு வகை கூறி முந்திய ஆண்டின் 6.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.6 சத வீதத்தினால் அதிகரித்தது. சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 1986 இன் 23.6 சதவீதத்திலிருந்து 1987 இல் 23.3 சதவீதத்திற்கு மிகச் சிறிதளவாக வீழ்ச்சியடைந்தது.

முந்திய ஆண்டில் சிறிதளவு பின்னடைவினைக் கொண்டிருந்த தேயிலை உற்பத்தி 1987 இல் 1 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்து 2,130 இலட்சம் கிலோக்கிராம்களாக விளங்கியது. இது இடைநில, தாழ்நில தேயிலைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பினதும் உயர்நிலத் தேயிலையின் உற்பத்தியில் ஏற்பட்ட குறைப்பினதும் ஒன்றிணைந்த விளைவாகும். மூன்றாவது தொடர்ச்சியான ஆண்டாக உயர்நிலத் தேயிலையின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டதுடன் 1987 இல் ஏற்பட்ட வீழ்ச்சி 5 சதவீதமாகவும் விளங்கியது. அரசிற்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் வெளியீடு வீழ்ச்சியடைந்தவேளையில் 1987 இல் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு முற்றாகத் தனியார்துறையிலிருந்தே கிடைத்தது மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினதும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் ஒன்றிணைந்த வெளியீடு 1987 இல் 3 சதவீதத்தினால் 1,232 இலட்சம் கிலோக்கிராம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1981 இலிருந்து அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து தனியார்துறையின் தேயிலை உற்பத்தி 1987 இல் விரும்பத்தக்க அளவான 10 சதவீதத்தினால் அதிகரித்தது.

தேயிலைக்கு மாறாக இறப்பர் உற்பத்தி 1987 இல் 11 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்து 1,230 இலட்சம் கிலோக்கிராம்களாக விளங்கியது. கடந்த இருபது ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த மட்டம் இதுவாகும். கடுமையான வரட்சி நிலை காரணமாக ஆண்டின் முதற் காற்பகுதியில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தவேளையில் ஆண்டின் மூன்றாம் காற்பகுதியில் கடுமையான மழை காரணமாக முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் பால் எடுத்தல் தடைப்பட்டது. உற்பத்தியின் வீழ்ச்சியில் அரசதுறை, தனியார்துறை இரண்டும் பங்கு கொண்டிருந்தன. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினதும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் இணைந்த வெளியீடு (வாங்கப்பட்ட லேட்டெக்சிலிருந்தான உற்பத்தி நீங்கலாக) 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் தனியார்துறையின் உற்பத்தி 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1987 இல் உற்பத்தியில் ஏற்பட்ட பின்னடைவு குறைவான விளைச்சல், பால் எடுத்தலுக்கு உட்பட்ட பிரதேசத்தின் குறைப்பு ஆகிய இரண்டினதும் விளைவாக ஏற்பட்டதாகும். சராசரி விளைச்சல் எக்டேயர் ஒன்றுக்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 744 கிலோக்கிராம்களாக விளங்கியவேளையில் பால் எடுத்தலின் கீழான மொத்த நிலப்பரப்பு 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 165,565 எக்டேயர்களாக விளங்கியது. குறிப்பிடத்தக்களவு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த அளவு நிலப்பரப்பு இதுவாகும்.

1986 இல் மிக உயர்ந்த மட்டமான 30,390 இலட்சம் தேங்காய்களைக் கொண்டிருந்த தெங்கு உற்பத்தி 1987 இல் மிக மோசமான நிலையை அடைந்து 25 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்து 22,920 இலட்சம் காய்களாக விளங்கியது. ஆண்டின் பின் அரைப் பகுதியில் மிகவும் முனைப்பாகக் காணப்பட்ட இவ்வுற்பத்தி வீழ்ச்சி 1986 இலும் 1987 இலும் முக்கிய தெங்குப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் நிலவிய நீண்ட வரட்சி நிலைமைகளின் மிகப் பெருமளவு வெளிப்பாடாகும். விலைகள் மிகத்தாழ்வுற்றுக் காணப்பட்ட 1985 இலும், 1986 இலும் வளமாக்கிப் பயன்பாடு குறைவடைந்து காணப்பட்டதன் காலங் கடந்த தாக்கமும் ஒரு மேலதிக காரணியாக இருந்தது. மேலும், வரட்சிக் காலப்பகுதியில் வளமாக்கிப் பயன்பாடு குறைவடைவது இயல்பானதாகும். தேங்காய் உற்பத்தியில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல், உலர்த்திய தேங்காய் ஆகிய அனைத்து முக்கிய தெங்கு ஏற்றுமதி உற்பத்திகளும் குறைவடைந்தன. இதன் விளைவாக 1987 ஆம் ஆண்டுப் பகுதியில் பன்னாட்டுச் சந்தைகளில் தேங்காயின் விலைகள் குறிப்பிடத்தக்களவிற்கு மீள் நன்னிலையடைந்தபோதிலும் விலைகளின் முன்னேற்றத்தினால் கிடைத்த முழு நன்மைகளையும் இலங்கையினால் பெற முடியவில்லை. 1987 இல் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 51 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

தெங்கில் காணப்பட்ட அதே போக்கினைத் தொடர்ந்து நெல் உற்பத்தியும் 1987 இல் 21 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு (1,020 இலட்சம் புசல்கள்) 18 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நெல் உற்பத்தி வீழ்ச்சியடைந்த தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக இது இருந்ததுடன் 1987 இன் உற்பத்தி மட்டம் 1979 இன் பின்னர் ஏற்பட்ட மிகக் குறைந்த மட்டமாகவும் விளங்கியது. வீண் விரயம், விதை நெல் தேவைகள் என்பனவற்றிற்குச் சீராக்கம் செய்த பின்னர் 1987 இன் மொத்த நெல் உற்பத்திக்குச் சமமான அரிசியின் அளவு 13 இலட்சம் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டதுடன் மதிப்பிடப்பட்ட மொத்த ஆண்டு நுகர்வில் ஏறத்தாள 80 சதவீதத்தினை ஈடுசெய்யப் போதுமானதாக இருந்தது. 1986 இல் நெல் உற்பத்தி 98 சதவீதத்தினை ஈடுசெய்யப் போதுமானதாக இருந்தது. தெங்கினைப்போன்றே உற்பத்தியில் ஏற்பட்ட மிகக் கூடியளவு பின்னடைவிற்கு இவ்வாண்டில் மிக முக்கிய நெல் உற்பத்திப் பிரதேசங்களில் நிலவிய நீண்ட வரட்சி நிலைமைகளே முக்கிய காரணமாக இருந்தது. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் குழப்ப நிலைமைகளும் உற்பத்தியின்மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. உற்பத்தி வீழ்ச்சி 1986/87 பெரும் போகம், 1987 சிறுபோகம் இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டதுடன் ஒவ்வொரு பருவகாலத்தினதும் வீழ்ச்சி ஏறத்தாழ 18 சதவீதமாக இருந்தது.

பாதகமான வானிலை நிலைமைகளின் தாக்கத்தின் கீழ் 1987 இல் நெல் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 13 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1986/87 பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 507,830 எக்டேயர்களுக்கு 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் சிறுபோகத்தில் 273,396 எக்டேயர்களுக்கு 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. நெல் விதைக்கப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சிகள் முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களான குருநாகல், அநுராதபுரம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டன. உயர்ந்தளவு பயிர் இழப்புக்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 19 சதவீதத்தினைக் கொண்ட பெரும் அளவினால் வீழ்ச்சியடைந்தது. 1986/87 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 18 சதவீதத்தினாலும் சிறுபோகத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 20 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. 1987 பயிர்ச்

செய்கையாண்டில் விதைக்கப்பட்ட நிலப்பரப்பிற்கும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பிற்குமிடையிலான வேறுபாடு 102,479 எக்டேயர்களாக அல்லது விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 13 சதவீதமாக இருந்தது. மிகக் கடுமை யான வரட்சி நிலைமைகளுக்குட்பட்ட குருநாகல் மாவட்டத்திலேயே இரு பருவ காலங்களிலும் உயர்ந்தளவு பயிர் இழப்புக்கள் காணப்பட்டன.

1987 இல் கடுமையான பின்னடைவிற்குட்பட்ட இன்னொரு பயிரான சீனியின் வெளியீடு 29,304 மெற்றிக் தொன்களுக்கு 15 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்திற் குச் சொந்தமான தொழிற்சாலைகளுக்கு மட்டுமே முழுமையாக மட்டுப்படுத்தப் பட்டிருந்ததுடன் இவற்றின் உற்பத்தி ஏறத்தாள 29 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில் தனியார்துறையின் சீனி உற்பத்தி (பெல்வத்தை சீனிக் கூட்டு நிலையம்) 9 சதவீதத்தினால் அதிகரித்ததெனினும் வெளியீடு இவ் வாண்டில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினைவிடக் குறிப்பிடத்தக்களவிற்குக் குறை வாகவே விளங்கியது. 1987 இல் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தினதும், பெல்வத்தைச் சீனிக் கூட்டு நிலையத்தினதும் வெளியீடு முறையே 15,035 மெற்றிக் தொன்களாகவும், 14,269 மெற்றிக் தொன்களாகவும் விளங்கியது.

சிறு உணவுப் பயிர்த்துறையில் 1987 இன் செயலாற்றம் கலப்புற்றுக் காணப்பட்டது. உழுந்து, பயறு, தட்டைப்பயறு, சோளம், எள்ளு, வெங்காயம் போன்ற பல பயிர்களின் உற்பத்தி குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது. வரட்சி, நீர் வழங்கலில் பற்றாக்குறையை ஏற்படுத்தும்வேளையில் வேளாண்மையாளர்கள் நெல்லிலும் பார்க்கக் குறைந்தளவு நீர் தேவைப்படும் பயிர்களுக்கு மாறிக்கொள்வது வெளிப்படையானது. எனினும் உற்பத்தியில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்த முக்கிய சிறு உணவுப் பயிர்களாக உருளைக்கிழங்கு, மிளகாய், பம்பாய் வெங்காயம் என்பன காணப்பட்டன.

முன்னைய ஆண்டினைப்போன்றே 1987 இலும் மீன் உற்பத்தி 190,002 மெற்றிக் தொன்களை அடைந்து 4 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. அனைத்து மீன்பிடித்துறைகளும்—கரையோர மீன்பிடி, கரைகடந்த மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி, உள்ளூர் மீன்பிடி—இவ்வுற்பத்தியின் அதிகரிப்பிற்கு உதவின. நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் முக்கிய பங்கினைத் தனியார்துறை தொடர்ந்தும் வழங்கியது. தற்காலிக மதிப்பீடுகளின்படி 1987 இல் பால் உற்பத்தி 2,750 இலட்சம் இலீற்றர்களுக்கு 54 சதவீதத்தினால் மிகக் கூடியளவிற்கு அதிகரித்தவேளையில் முட்டை உற்பத்தியும் 8,150 இலட்சங்களுக்கு 22 சத வீதத்தினால் அதிகரித்தது.

அண்மை ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க எழுச்சியினைக் காட்டிய கைத்தொழில் துறை 1987 இலும் அதன் வளர்ச்சி வேகத்தினைக் கொண்டிருந்தது. 1986 இல் உண்மை நியதிகளில் மெச்சத்தக்க விதத்தில் 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 1987 இல் 8 சதவீதத்தினால் மேலும் விரிவுற்றது. கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட விரிவு முழுவதும் தனியார் துறைக் கைத்தொழில்களிலிருந்து கிடைத்ததுடன் இது மெச்சத்தக்க விதத்தில் 15 சதவீதத்தினால் உயர்வடைந்தது. மாறாக, அரசதுறைக் கைத்தொழிலின் வெளியீட்டுப் பெறுமதி 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியின் இவ்வீழ்ச்சி பெரும்பாலும் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் (24 சதவீதம்) அரச வடிசாலைக் கூட்டுத்தாபனம் (21 சதவீதம்), பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் (16 சதவீதம்), இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்

(7 சதவீதம்), இலங்கை டயர் கூட்டுத்தாபனம் (4 சதவீதம்), தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் (3 சதவீதம்) என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட குறை வினால் உருவானதாகும். மொத்த அரசதுறைக் கைத்தொழில் உற்பத்தியில் மிகப் பெரும் பங்கிற்கு வகை கூறும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தின் வெளியீட்டில் மாத்திரம் மிகச் சிறிதளவு வளர்ச்சி காணப்பட்டது. உள் நாட்டுக் குழப்பங்களும் பல அரசதுறைக் கைத்தொழில்களின் உற்பத்தியைக் கடுமையாகப் பாதித்தன. இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் கூட்டுத்தாபனங்களாக எண்ணெய் கொழுப்பு (89 சத வீதம்), அரச அகழ்வு, கனிப்பொருள் அபிவிருத்தி (34 சதவீதம்), அரச மரம் (19 சதவீதம்), இலங்கைச் சீமெந்து (11 சதவீதம்), இலங்கை உருக்கு (11 சத வீதம்) என்பன காணப்பட்டன.

தனியார்துறையில் உற்பத்தி அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் துணைத் துறைகளாகப் புடவைகள், அணியும் ஆடைகள், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இரசாயனம் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் என்பன விளங்கின. எனினும் மிகக் குறிப்பிடத்தக்க பங்களிப்பு புடவைகள், ஆடைகள் கைத்தொழில்களிலிருந்து கிடைத்தது. இதற்கு அதிகரித்த ஏற்றுமதி அனுமதிப் பங்குகளின் பயன்பாடு, உயர்ந்த கூட்டிய பெறுமதியினைக் கொண்ட விடயங்களை நோக்கி உற்பத்தி உள்ளடக்கம் மாறியமை இரண்டும் காரணங்களாகும். 1987 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி யில் புடவைகள், ஆடைகளின் ஏற்றுமதிகள் 65 சதவீதத்திற்கு வகை கூறின.

நாட்டின் சில பகுதிகளில் உள்நாட்டுக் குழப்பங்கள் தொடர்ந்தபோதும் கவர்ச்சிமிக்க ஊக்குவிப்புக்களின் காரணமாகக் கைத்தொழில் துறையில் முத லீட்டு வேகம் 1987 இலும் தொடர்ந்தது. 1987 இல் உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழு ரூ. 5,300 இலட்சங் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீட்டுடன் ஏறத்தாள 14,500 ஆட்களுக்கான உள்ளார்ந்த தொழில்வாய்ப் பினைக் கொண்ட 364 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இதே போன்று வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவும் ரூ. 6,720 இலட்சங் கொண்ட எதிர்பார்க்கப்பட்ட மூலதன முதலீட்டினையும் ஏறத்தாள 5,000 ஆட்களைக் கொண்ட மதிப்பிடப்பட்ட தொழில் நிலையையும் கொண்ட 41 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு இவ்வாண்டில் ஒப்புதலளித்தது. 1986 இல் உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவினாலும் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவினாலும் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை முறையே 321 ஆகவும், 41 ஆகவும் இருந்தன. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவும் 1986 இன் 10 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1987 இல் 31 செயற்றிட்டங் களுக்கு ஒப்புதலளித்தது. இச்செயற்றிட்டங்களிலுள்ள மொத்த முதலீடு 8,970 ஆட்களைக் கொண்ட தொழில் உள்ளார்ந்த வளத்துடன் ரூ. 8,120 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது.

அண்மைய போக்குகளைப் பேணும் விதத்தில் மீளாய்விற்குரிய ஆண்டிலும் கூட்டுத்தாபனங்களுக்கான வரவு செலவுத்திட்ட மாற்றல்கள் மிதமாக விளங்கின. 1987 இல் அத்தகைய மாற்றல்கள் முன்னைய ஆண்டின் ரூ. 4,730 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 2,900 இலட்சமாக விளங்கின. 1987 இன் மாற்றல்களில் மூலதன மாற்றல்கள் ரூ. 2,400 இலட்சத்தினையும் (83 சதவீதம்), நடைமுறை மாற்றல்கள் ரூ. 500 இலட்சத்தினையும் (17 சதவீதம்) கொண்டிருந்தன. கடந்த இரு ஆண்டுகளைப்போன்றே இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் வரவு செலவுத் திட்ட மாற்றல்களில் ஐந்தில் நான்கு பங்கினைப் பெற்றது.

1987 இல் வலுத்துறையில் காணப்பட்ட அபிவிருத்திகள் முன்னைய ஆண்டில் நிலவிய சாதகமான போக்கிற்கு மாறுனவையாக இருந்தன. நீரேந்து பிரதேசங்களில் நிலவிய நீண்ட வரட்சியின் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் கடுமையாகக் குறைவடைந்தமையினுல் நீர் மின்வலு உருவாக்கம் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. இதனுல் டீசல், டீசல் எரிபொருள் என்பனவற்றின் பெருமளவு நுகர்வுடன் தொடர்புபட்ட வெப்பமின் வலுவில் அதிகரித்த அளவிற்கு தங்கியிருப்பதன்மூலம் நாட்டின் வலுத் தேவைகளை ஈடுசெய்யவேண்டியிருந்தது. உண்மையில் மின்வலு உருவாக்கத்தின்மீது அதிகரிக்கின்ற தடைகளைக் கருத்திற் கொண்டு ஓகத்திற்கும் ஒற்ருேபருக்கும் இடையில் நாடு முழுவதும் மூன்றரை மணித்தியால மின்வெட்டினை விதிக்கவேண்டியிருந்தது. இது பொருளாதார நடவடிக்கையின்மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அதேவேளை பன்னுட்டுச் சந்தையில் பெற்ருேலிய உற்பத்திகளின் விலைகளும் (மசகெண்ணெய் உட்பட) அதிகரித்தன. இதன் காரணமாகப் பெற்ருேலிய இறக்குமதிகள் மீதான செலவு குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்து சென்மதி நிலுவையின் மீதான தாக்கத்தினைக் கூட்டியது. மொத்த எண்ணெய் இறக்குமதிச் செலவு சிஎஉ நியதிகளில் 20 சதவீதத்தினுல் உயர்வடைந்து முன்னைய ஆண்டின் 11 சதவீதத்திற்கெதிராக மொத்த இறக்குமதியில் 14 சதவீதத்திற்கு வகை கூறியது.

சில்லறை விலைகளில் ஏற்பட்ட வளர்ச்சியினுல் அளவிடப்பட்டவாறு 1987 இல் பணவீக்க வீதம் முன்னைய ஆண்டினைவிடச் சிறிதளவு குறைவானதாக இருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அதிகரிப்பின் ஆண்டுச் சராசரி வீதம் 1986 இன் உயர்வான 8.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.7 சதவீதமாக இருந்தது. எனினும் புள்ளிக்குப் புள்ளி என்ற அடிப்படையில் அதாவது 1986 டிசெம்பரைவிட 1987 டிசெம்பரில் சுட்டெண் 10.2 சதவீதத்தினுல் அதிகரித்து 1987 இன் இறுதி மாதங்களில் விலைகளில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்பட்டமையைப் பிரதிபலித்தது. இம்மாற்றங்கள் 1987 இன் இறுதிப் பகுதியில் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க விலைத்தாக்கம் நிலவியமையைக் காட்டுகின்றன. விலைகளின் உயர்வு 1987 இன் முதற் காலாண்டுப் பகுதியில் மிக மெதுவாக இருந்ததுடன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் மிதமாக அதிகரித்தது. மூன்றும் காலாண்டுப் பகுதியில் பருவகாலக் காரணிகள் விலை அதிகரிப்பு வீதத்தினைக் குறைப்பதற்கு உதவியவேளையில் நான்காம் காலாண்டுப் பகுதியில் விலைகள் மிக விரைவான வேகத்தில் உயர்வடைந்தன.

1987 ஆம் ஆண்டுப் பகுதியில் நுகர்வோர் விலைகள் மேல்நோக்கி உயர்வதற்குப் பல காரணிகள் உதவின. இவ்வுயர்ச்சி முக்கியமாக உணவு வகைகளில் தெளிவாகக் காணப்பட்டது. முக்கிய உற்பத்திப் பகுதிகளில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகளும் வடக்கிலும், கிழக்கிலும் காணப்பட்ட குழப்ப நிலைமைகளும், அரிசி, செத்தல் மிளகாய் போன்ற உணவு விடயங்களின் உற்பத்தியைக் குறைத்துப் பருவகாலப் பற்ருக்குறைகளையும் விலை அதிகரிப்புக்களையும் உருவாக்கின. தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட கடுமையான பின்னடைவு விலைகள் மிகக் கூடியளவிற்கு உயரக் காரணமாயிற்று. பன்னுட்டுச் சந்தைகளில் விலைகள் அதிகரித்தமையின் விளைவாக உள்நாட்டுச் சீனியின் விலைகள் உயர்வடைந்த வேளையில் மாட்டிறைச்சியின் விலைகளும் அதிகரித்தன. தயாரிப்புப் பொருட்களைப் பொறுத்தவரை மூலப்பொருட்கள், கூலிகளின் அதிகரித்துச் செல்லும் செலவிற்கேற்ப உற்பத்தியாளர்கள் விலைகளைச் சீராக்கிக் கொண்டனர். அதே நேரம் உயர்ந்த கலால் தீர்வைகள் புகையிலை, குடிவகைகளின் விலைகளில் உயர்வுகளைத் தோற்றுவித்த வேளையில் ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் உயர்வாக விளங்கின. இதற்குப் பன்னுட்டுச் சந்தையில் காணப்பட்ட சிறந்த விலைகளும், செலாவணி

வீதங்கள் தேய்வடைந்தமையுமே காரணமாகும். ரூபா தேய்வடைந்தமை உள் நாட்டு நாணய நியதிகளில் இறக்குமதி விலைகளை மேல்நோக்கித் தள்ளியதுடன் இது வெளிநாட்டு நிலுவைகளைப் பாதுகாக்கும் செயல்முறைகளின் தவிர்க்க முடியாத விளைவாக ஏற்பட்டதாகும். கேள்விப் பக்கத்தில் நாணயக் கொள்கையில் காணப்பட்ட சில தளர்வுகள் குறிப்பாக ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் வங்கிக் கொடுகடன் வளர்ச்சியில் விரைவினைத் தோற்றுவித்தன. வரவு செலவுத்திட்டப் பற்றுக்குறை தொடர்ந்தும் விரிவடைந்தது. ஆண்டின் இறுதிக் காலாண்டில் உள்நாட்டு வழங்கல் நிலைமை நலிவுற்ற தன்மையை அடைந்த வேளையில் இவ்வபிவிருத்திகள் ஒன்று சேர்ந்த கேள்வியை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு வழியமைத்தன.

1987 இல் உற்பத்தியாளர் விலைகளின் அதிகரிப்பு நுகர்வோர் விலைகளின் உயர்வினைவிட மிக அதிகமாக இருந்தது. 1985 இலும், 1986 இலும் முறையே 15 சதவீத, 3 சதவீத வீழ்ச்சிகளைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்த மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1987 இல் 13 சதவீதத்தினால் உயர்வடைந்தது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் அதாவது 1986 திசெம்பரினைவிட 1987 திசெம்பரில் சுட்டெண் 13 சதவீதத்தினால் அதிகரித்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணைப் பொறுத்தவரை சுட்டெண் ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் மிகக் கூடியளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது. மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் மிகக் கூடிய அதிகரிப்பிற்கு முக்கிய ஏதுக் காரணியாக இச்சுட்டெண்ணில் உயர்ந்த நிறையைக் கொண்டுள்ள ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் விளங்கியது.

1987 இல் அரச ஊழியர்களின் கூலி வீதச் சுட்டெண் 1986 சனவரியின் மட்டத்தில் நிலையாக இருந்தவேளையில் நன்கமைந்த தனியார்துறையிலுள்ள பல்வகைத் தொழிலாளர்களும் கூலி உயர்வுகளைப் பெற்றனர். பெயரளவு நியதிகளில் கூலி நிர்ணய சபைக்குட்பட்ட வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களின் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 5.4 சதவீதங் கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் சராசரியாக 6.3 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் விலை மட்டத்தில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பினைக் கொண்ட பின்னணிக்கெதிராக அவர்களின் உண்மைக் கூலிகள் இவ்வாண்டுக் காலத்தில் 1.4 சதவீதத்தினால் குறைவடைந்தன. 1987 இல் வேளாண்மையிலுள்ள தொழிலாளர்களின் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண் 4.9 சதவீதத்தினால் உயர்வுற்றதெனினும் அவர்களின் உண்மைக் கூலிகள் 2.6 சதவீதத்தினால் குறைவுற்றன. முன்னைய ஆண்டினைப் போன்றே கைத்தொழிலிலும், வர்த்தகத்திலுமுள்ள தொழிலாளர்கள் பெயரளவு கூலிகளில் 14.3 சதவீதங் கொண்ட மிக உயர்ந்த அதிகரிப்பினைப் பெற்றதன் மூலம் அவர்களின் உண்மைக் கூலிகள் இவ்வாண்டில் 6 சதவீதத்தினால் முன்னேற்றமடைந்தன.

1987 இல் தனியார்துறையின் தொழில்நிலை அதிகரித்தவேளையில் அரசதுறையின் தொழில்நிலை முன்னைய ஆண்டின் மட்டங்களைவிடச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. தற்காலிக மதிப்பீடுகளின்படி 1987 இறுதியில் அரசதுறையின் மொத்தத் தொழில்நிலை 1,194,000 இற்கு 1.5 சதவீதத்தினால் சிறிதளவிற்கு வீழ்ச்சியடைந்தது. அரசதுறையிலுள்ள மொத்தத் தொழில்நிலையில் ஏறத்தாள 749,000 அரசுசார் நிறுவனங்களில் காணப்பட்ட வேளையில் மிகுதி 445,000 அரசதுறையில் காணப்பட்டன. அரசதுறையின் தொழில்நிலையில் ஏற்பட்ட குறை

ப்பு, அரசதுறையின் தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பினதும் அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலையில் ஏற்பட்ட குறைப்பினதும் இணைந்த தாக்க மாகும். துறைவாரியான அடிப்படையில் 1987 இல் அரசதுறையில் தொழில்நிலை அதிகரித்த முக்கிய பகுதிகளாகப் பாதுகாப்புப் பணிகள், கல்வி, நலத்துறை, பொது நிருவாகம் என்பன காணப்பட்டன.

அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கினைத் தொடர்ந்து, அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை 1987 இறுதியில் மொத்தமாக 749,000 ஆக மதிப்பிடப்பட்டு 2.4 சதவீதங் கொண்ட மிதமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. எனினும் அரசுசார்துறையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் அர சுடமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட வாயு நீர் கூட்டு நிலையம் போன்ற வலு தொடர்பான கூட்டுத்தாபனங்களிலும் சில போக்குவரத்துச் சபைகளிலும் தொழில்நிலை அதிகரித்தவேளையில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் கட்டடவாக்கத்துடன் தொடர்புபட்ட கூட்டுத்தாபனங்களின் தொழில் நிலை வீழ்ச்சியடைந்தது.

ஊழியர் சேமநிதியம், ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட சேமநிதியங்கள் என்ப வற்றின் பதிவுகளது அடிப்படையில் 1987 இறுதியில் நன்கமைந்த தனியார் துறையின் தொழில்நிலை 330,000 என மதிப்பிடப்பட்டு 1 சதவீதங் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைக் காட்டியது. அண்மை ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட சாதகமான போக்கின் தொடர்ச்சியாக, மீளாய்விற்குரிய ஆண்டிலும் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவிற்குட்பட்ட தொழில் முயற்சிகளில் தொழில்நிலை அதிகரித்தது. 1987 ஆம் ஆண்டு இறுதியில் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவில் தொழிலிலிருந்த ஆட்களின் மொத்த எண்ணிக்கை 50,744 ஆக விளங்கி முன்னைய ஆண்டின் மட்டத்தினைவிட 12.6 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

பெருந்தோட்ட வேளாண்மைத்துறையின் வெளியீட்டில் பின்னடைவு காணப்பட்டபோதும் 1987 இல் வெளிநாட்டு வர்த்தகத்துறையின் அபிவிருத்தி யில் பொதுவாகச் சாதகமற்ற தன்மை காணப்படவில்லை. சிஎஉ நியதிகளில் ஏற்றுமதிப் பெறுமதி 4 சதவீதத்தினால் உயர்வடைந்தவேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் 1986 இனைவிட 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக 1987 இல் வர்த்தகக் கணக்கின் மீதான பற்றுக்குறை 18 சதவீதத்தினால் குறைவடைந்தது. இவ்வாறிருந்துங்கூட குறைவடைந்த மூலதன உட்பாய்ச்சலைக் கருத்திற் கொள்கையில் 1987 இல் வர்த்தகப் பற்றுக்குறை வெளிநாட்டுச் சொத்துக்களின் மீது தாக்கத்தினை ஏற்படுத்துமளவிற்குப் பெரிதாக இருந்தது.

1987 இல் ஏற்றுமதித்துறையின் திருந்திய செயலாற்றத்திற்குக் கைத் தொழில் ஏற்றுமதிகள், மற்றும் இரத்தினக்கற்களிலிருந்தான உயர்ந்த வருவாய் களே பெருமளவிற்குக் காரணமாகும். உண்மை நியதிகளில் தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகளின் விலைகள் அதிகரித்தபோதும் குறைவடைந்த அளவு ஏற்று மதிகளின் காரணமாக வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் சிஎஉ நியதிகளில் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இறக்குமதிப் பக்கத்தில் பெற் றோலிய இறக்குமதிகளின் அளவு, விலைகள் இரண்டும் அதிகரித்தமையின் காரண மாக அதன் பெறுமதி குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்தது. எனினும் நுகர்வுப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்களின் பெறுமதி உண்மை நியதிகளில் வீழ்ச்சி யடைந்து சிஎஉ நியதிகளில் பெறுமதியில் பொதுவான குறைப்பினை விளைவித்தது.

சீராக்கம் செய்யப்பட்ட சுங்கத் தரவுகளின் நியதிகளில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1986 இன் ரூ. 340,720 இலட்சத்துடன் (சிஎஉ 10,360 இலட்சம்) ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 411,330 இலட்சமாக (சிஎஉ 10,800 இலட்சம்) மதிப்பிடப்பட்டு ரூபா நியதிகளில் 21 சதவீத அதிகரிப்பினையும் சிஎஉ நியதிகளில் 4 சதவீத அதிகரிப்பினையும் பதிவு செய்தது. 1985 இலும், 1986 இலும் ரூபா நியதிகள், சிஎஉ நியதிகள் இரண்டிலும் காணப்பட்ட வீழ்ச்சிகளைக் கருத்திற் கொள்கையில் இது வரவேற்கத்தக்கதொரு அபிவிருத்தியாகவிருந்தது. 1987 இல் சிறந்த ஏற்றுமதிச் செயலாற்றத்திற்கான முக்கிய தூண்டுதல்கள் கைத்தொழில், கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1986 இன் ரூ. 158,780 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,830 இலட்சம்) 1987 இல் ரூ. 200,040 இலட்சத்திற்கு (சிஎஉ 5,250 இலட்சம்) அதிகரித்த வேளையில் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 11,820 இலட்சத்திலிருந்து (சிஎஉ 360 இலட்சம்) ரூ. 17,580 இலட்சத்திற்கு (சிஎஉ 460 இலட்சம்) உயர்வடைந்தது. வேளாண்மை ஏற்றுமதிகளின் பெறுமதி சிஎஉ நியதிகளில் குறைவடைந்தமைக்கு மூன்று முக்கிய வேளாண்மைப் பண்டங்களின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சியே ஒரே காரணமாக இருந்ததுடன் 1987 இல் இலங்கையின் ஏற்றுமதிச் செயலாற்றத்தில் மிக ஏமாற்றம் தரும் பண்பாகவும் இது விளங்கியது. 1987 இல் தேயிலை ஏற்றுமதியின் அளவு 2,010 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தவேளையில் இறப்பரின் ஏற்றுமதி அளவு 1,060 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு 4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1986 இல் 11,050 இலட்சம் காய்களுக்குச் சமமானதாக இருந்த தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் பொதுவான ஏற்றுமதி அளவு 1987 இல் 5,380 இலட்சம் காய்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இக்குறைப்புக்களை நோக்குகையில் பன்னாட்டுச் சந்தைகளில் இப்பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் முழு நன்மைகளையும் நாடு பெறத் தவறிவிட்டமை புலனாகும். சிஎஉ நியதிகளில் தேயிலையிலிருந்தான வருவாய்கள் சிறிதளவாலும், இறப்பரிலிருந்தான வருவாய் 4 சதவீதத்தினாலும், தெங்கிலிருந்தான வருவாய் 23 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. விலைகளில் முன்னேற்றம் காணப்பட்டபோதும் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய் 1986 இன் சிஎஉ 4,790 இலட்சத்திலிருந்து 1987 இல் சிஎஉ 4,580 இலட்சத்திற்கு 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

அண்மை ஆண்டுகளில் ஏற்றுமதித்துறையின் மிக முக்கியமானதொரு பண்பாக இருந்த கைத்தொழில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட படிப்படியான விரிவாக்கம் இவ்வகை ஏற்றுமதிகளுக்கு 1986 இல் மிகச் செல்வாக்குமிக்க இடத்தைத் தோற்றுவித்தது. 1987 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 26 சதவீதத்தினால் உயர்ந்து (சிஎஉ 9 சதவீதம்), 1986 இன் ரூ. 158,780 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,830 இலட்சம்), 1987 இல் ரூ. 200.040 இலட்சத்திற்கு (சிஎஉ 5,250 இலட்சம்) அதிகரித்தது. இவ்வதிகரிப்புடன் மொத்த ஏற்றுமதிகளில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பங்கு முன்னைய ஆண்டின் 47 சதவீதத்திலிருந்து 49 சதவீதத்திற்கு அதிகரித்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி புடவை, ஆடைகளின் ஏற்றுமதிகளில் பெருமளவிற்குப் பிரதிபலித்ததுடன் இது 1986 இன் ரூ. 96,290 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,930 இலட்சம்) 1987 இல் ரூ. 128,970 இலட்சத்திற்கு (சிஎஉ 3,390 இலட்சம்) 34 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 16 சதவீதம்) மெச்சத்தக்க விதத்தில் உயர்வடைந்தது. 1987 இல் மிக்க ஆற்றலை எடுத்துக் காட்டிய இன்னொரு ஏற்றுமதி

விடயமாக விளங்கிய இரத்தினக்கல் ஏற்றுமதிகளின் பெறுமதி 1986 இன் ரூ. 7,550 இலட்சத்திலிருந்து (சிஎஉ 230 இலட்சம்) 1987 இல் ரூ. 14,470 இலட்சத்திற்கு (சிஎஉ 380 இலட்சம்) 92 சதவீதத்தினுல் (சிஎஉ 65 சதவீதம்) உயர்வடைந்தது. வருவாய்களில் ஏற்பட்ட வளர்ச்சி உயர்ந்த அளவுகள், சாதக மான விலைகள் இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. ஏற்றுமதி அளவு 1986 இன் 49 இலட்சம் கரட்டிலிருந்து 1987 இல் 54 இலட்சம் கரட்டிற்கு அல்லது 10 சத வீதத்தினுல் அதிகரித்தவேளையில் சராசரி க.ஏ.பெ. விலை இதேகாலப்பகுதியில் கரட் ஒன்றிற்கு ரூ. 154 இலிருந்து ரூ. 267 இற்கு 73 சதவீதத்தினுல் அதிகரித்தது. மொத்த ஏற்றுமதியில் இரத்தினக்கற்களின் ஏற்றுமதிகளின் பங்கு 1986 இன் 2.2 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 3.5 சதவீதமாக இருந்தது.

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின் நியதிகளில் இறக்குமதிகள் மீதான செலவினம் 1986 இன் ரூ. 545,590 இலட்சத்துடன் (சிஎஉ 16,580 இலட்சம்) ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 605,170 இலட்சமாக (சிஎஉ 15,880 இலட்சம்) விளங்கியது. இது ரூபா நியதிகளில் 11 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப் பிரதி பலித்தபோதும் சிஎஉ நியதிகளில் இது 4 சதவீதங் கொண்டதொரு வீழ்ச்சி யாகும். வீழ்ச்சி நுகர்வுப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி களிலேயே பெருமளவிற்குப் பிரதிபலிக்கப்பட்டது. ரூபா நியதிகளில் இது ரூ. 138,040 இலட்சத்திற்கு 13 சதவீதத்தினுல் அதிகரித்தபோதும் சிஎஉ நியதிகளில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 3 சதவீதத் தினுல் சிஎஉ 3620 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. சிஎஉ நியதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி நுகவுர்ப் பொருட்கள் இறக்குமதிகளின் அனைத்து வகைகளி லும் பிரதிபலிக்கப்பட்டது. குறிப்பாக உணவு மற்றும் குடிபானத்தின் இறக்கு மதிகள் சிஎஉ 1,960 இலட்சத்திற்கு 5 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமைக்கு அரிசி இறக்குமதியில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சியே பெருமளவிற்குக் காரண மாகும். எனினும் இவ்வகையில் சீனி இறக்குமதி மீதான செலவினம் 1986 இன் சிஎஉ 540 இலட்சத்திலிருந்து 1987 இல் சிஎஉ 630 இலட்சத்திற்கு 17 சதவீதத்தி னுல் உயர்வடைந்தது. இதற்கு விலைகள், அளவு இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும்.

1987 இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ரூ. 113,320 இலட்சமாக (சிஎஉ 2,970 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 7 சதவீத வீழ்ச்சியைக் காட்டியதெனினும் ரூபா நியதிகளில் 7 சதவீத மிதமான அதிகரிப்புக் காணப்பட்டது. சிஎஉ நியதிகளில் கட்டிடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதி முறையே 33 சதவீதத்தினுலும், 16 சத வீதத்தினுலும் மிகக் கூடியளவில் வீழ்ச்சியடைந்தவேளையில் பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் இறக்குமதிப் பெறுமதியும் 2 சதவீதத்தினுல் சிறிதளவாகக் குறைவடைந்தது.

நுகர்வு மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிக்கு மாருக இடை நிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் ரூ. 346,190 இலட்சமாக (சிஎஉ 9,090 இலட்சம்) விளங்கி ரூபா மற்றும் சிஎஉ நியதிகளில் இரண்டிலும் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. ரூபா நியதிகளில் அதிகரிப்பு 21 சதவீதமாகவும் சிஎஉ நியதிகளில் 4 சதவீதமாகவும் இருந்தது. இதற்கு விலை மற்றும் அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாகப் பெற்றோலிய இறக்குமதிகள் 1986 இன் ரூ. 62,930 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,910 இலட்சம்) 1987 இல் ரூ. 87,160 இலட்சத்திற்கு (சிஎஉ 2,290 இலட்சம்) உயர்வடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும், மசகெண்ணெய் இறக்குமதியின் அளவு 1986 இன் 121 இலட்சம்

Central Bank of Sri Lanka
22683
11 JUN 2009
LIBRARY INFORMATION CENTRE
Communication Department



பீப்பாய்களிலிருந்து 1987 இல் 131 இலட்சம் பீப்பாய்களுக்கு உயர்வடைந்த வேளையில் சராசரி இறக்குமதி விலை பீப்பாவொன்றிற்கு சி.ஐ.உ 13.3 இலிருந்து சி.ஐ.உ 14.3 இற்கு அதிகரித்தது. இன்னொரு முக்கிய பண்பு யாதெனில் ஆடைக் கைத்தொழிலின் மூலப்பொருள் தேவைகளைப் பெருமளவிற்கு ஈடுசெய்யும்பொருட்டுப் புடவைகள் துணிகளின் இறக்குமதிகள் அதிகரித்தமையேயாகும். இவ்விறக்குமதியின் பெறுமதி 1986 இல் ரூ. 63,530 இலட்சத்திலிருந்து (சி.ஐ.உ 1,930 இலட்சம்) 1987 இல் ரூ. 80,860 இலட்சத்திற்கு (சி.ஐ.உ 2,120 இலட்சம்) உயர்வடைந்தது.

வர்த்தக, மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவைகள் இரண்டினதும் நியதிகளில் 1987 இல் இலங்கையின் சென்மதி நிலுவை சில முன்னேற்றங்களைப் பதிவு செய்தது. வணிக வர்த்தக கணக்கின் மீதான பற்றுக்குறை 1986 இன் சி.ஐ.உ 6,490 இலட்சத்திலிருந்து 1987 இல் சி.ஐ.உ 5,310 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதே போக்கினை ஒத்ததாக நடைமுறைக் கணக்குக் குறையும் சி.ஐ.உ 3,630 இலட்சத்திலிருந்து சி.ஐ.உ 2,660 இலட்சத்திற்குக் குறைவடைந்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக இது 1986 இன் 6.6 சதவீதத்திலிருந்து 1987 இல் 5.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்று சென்மதி நிலுவையின் மீதான தாக்கத்தைச் சிறிதளவிற்கு இலகுவாக்கியது. எனினும் திரண்ட நிலுவை 1987 இல் தொடர்ந்தும் சி.ஐ.உ 720 இலட்சமளவிற்குக் காணப்பட்டது. திரண்ட நிலுவை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகப் பற்றுக்குறையில் காணப்பட்டு வெளிநாட்டு ஒதுக்குகளைப் பயன்படுத்துவதற்கு வழிகோலியது. கடந்த மூன்றாண்டுக் காலப்பகுதியில் திரண்ட நிலுவையில் ஒன்று சேர்ந்த பற்றுக்குறை சி.ஐ.உ 2,570 இலட்சம் வரையில் இருந்தது.

சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கின் வெளிப்பாடு 1987 இல் மேலும் மோசமடைந்து பற்றுக்குறை 1986 இன் சி.ஐ.உ 1,090 இலட்சங்களிலிருந்து 1987 இல் சி.ஐ.உ 1,140 இலட்சத்திற்கு விரிவடைந்தமைக்குச் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வீழ்ச்சியே முழுமையான காரணமாகும். 1987 இல் சுற்றுலா வருகைகள் 21 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையுடன் சுற்றுலாவிலிருந்தான பெறுகைகளும் 1986 இன் சி.ஐ.உ 710 இலட்சத்திலிருந்து 1987 இல் சி.ஐ.உ 480 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இது 32 சதவீதங் கொண்டதொரு வீழ்ச்சியாகும்.

எனினும் 1987 இல் சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கிலும் கூடச் சில சாதகமான அபிவிருத்திகள் காணப்பட்டன. கடந்த இரு ஆண்டுகளாகப் பற்றுக் குறையாகக் காணப்பட்ட துறைமுகம், போக்குவரத்து மற்றும் காப்புறுதிவகை 1987 இல் சி.ஐ.உ 80 இலட்சம் கொண்ட மிகையை உருவாக்கின. இதற்கு துறைமுகத்திலிருந்தான அதிகரித்த பெறுகைகள் ஒப்பந்தக் கட்டணங்களில் ஏற்பட்ட குறைப்பு ஏயர் லங்காவினால் எரிபொருள் கொடுப்பனவு செய்யப்பட்டமை என்பன காரணங்களாகும்.

இன்னொரு முக்கிய அபிவிருத்தி யாதெனில் பன்னாட்டுச் சந்தைகளில் வட்டி வீதங்கள் இலகுவாக்கப்பட்டதன் பெருமளவு காரணமாக முதலீட்டு வருவாய்க் கணக்கின் மீதான பற்றுக்குறை குறைவடைந்தமையாகும். பன்னாட்டு நாணய நிதியக் கொடுகடன்கள் உட்பட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக்

அட்டவணை 1.3

## சென்மதி நிலுவையின் பகுப்பு 1984—1987

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| விடயங்கள் | | 1984 (அ) | 1985 | 1986(அ) | 1987(ஆ) |
|---|---|---|---|---|---|
| வணிகப் பொருட்கள் (தேறிய) | ... | — 850<br>(—453) | —19,801<br>(—711) | —21,390<br>(—649) | —20,743<br>(—531) |
| காரணியல்லாப் பணிகள் (தேறிய) | ... | 1,666<br>(64) | — 201<br>(—8) | 255<br>(8) | 79<br>(1) |
| காரணிப் பணிகள் (தேறிய) | ... | —3,401<br>(—130) | — 3,445<br>(—125) | — 3,871<br>(—117) | —4,336<br>(—115) |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | ... | 7,031<br>(270) | 7,212<br>(262) | 7,982<br>(242) | 9,161<br>(240) |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | ... | 5,154<br>(198) | 4,828<br>(172) | 5,114<br>(153) | 5,302<br>(139) |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ... | —1,400<br>(—51) | —11,408<br>(—410) | —11,910<br>(—363) | —10.537<br>(—266) |
| மொத்த நிலுவை | ... | +7,062<br>(+297) | —1,060<br>(—110) | —2,124<br>(—74) | —1,801<br>(—72) |

### சில முக்கிய குறிகாட்டிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வர்த்தக மாற்று விகிதம் (1981=100) | ... | 140 | 115 | 111 | 114 |
| தேறிய பெற்றோலிய இறக்குமதிகள் | ... | 7,394<br>(284) | 7,109<br>(257) | 3,935<br>(120) | 6,124<br>(160) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடை முறைக் கணக்குக்குறை | ... | 0.9 | 6.9 | 6.6 | 5.2 |
| மொத்த பன்னாட்டு ஒதுக்கு | ... | 18,942<br>(735) | 18,367<br>(611) | 17,152<br>(492) | 18,134<br>(415) |
| பன்னாட்டு ஒதுக்குகள்—மாதங்களுக்கான இறக்குமதிகள் (இ) | ... | 4.4 | 4.4 | 3.7 | 2.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) அடுத்த ஆண்டின் இறக்குமதிகளுக்காக சிஎஉ நியதியில் திட்டமிடப்பட்டது.

கொடுப்பனவுகளும் ஏனைய பணிக் கட்டணங்களும் 1986 இன் சிஎஉ 1,590 இலட்சத்திலிருந்து 1987 இல் சிஎஉ 1,560 இலட்சத்திற்குக் குறைவடைந்து சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இலாபங்கள், பங்கிலாபங்களின் அனுப்பல்களும்கூட 1987 இல் குறைவாகவே இருந்தன.

அண்மை ஆண்டுகளில் தனியார் பணவனுப்பல்கள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல் சென்மதி நிலுவைக்சாதாரமான முக்கிய மூலமாக மாறியதெனினும் எண்ணெயில் தங்கியிருக்கும் மேற்காசியப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சுருக்கத்தினைத் தொடர்ந்து இப்பணவனுப்பல்களில் சில மிதமான தன்மைகள் எதிர்பார்க்கப்பட்டன. இதனால் 1986 இல் சிஎஉ நியதிகளில் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்ற அத்தகைய பணவனுப்பல்கள் 1987 இல்

மேலும் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்து சிஎஉ 2,680 இலட்சத்திற்கு சிஎஉ 10 இலட்சத்தினுல் குறைவடைந்தன. எனினும் 1987 இல் ரூபா நியதிகளில் அத்தகைய பணவனுப்பல்கள் 16 சதவீதத்தினுல் அதிகரித்து ரூ. 102,550 இலட்சங்களே அடைந்தன. 1987 இல் செயற்றிட்ட மற்றும் பண்டக்கொடைகளே உள்ளடக்கிய அலுவல்சார் மாற்றல்கள் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வீழ்ச்சியடைந்தன. அத்தகைய மாற்றல்கள் 1985 இன் சிஎஉ 1,720 இலட்சத்திலிருந்து 1986 இல் சிஎஉ 1,530 இலட்சங்களுக்குக் குறைவடைந்து 1987 இல் மேலும் சிஎஉ 1,390 இலட்சங்களுக்கு வீழ்ச்சியுற்றன. இவ்வபிவிருத்திகளின் தேறிய விளேவு யாதெனில் சிஎஉ நியதிகளில் தனியார் மற்றும் அலுவல்சார் இரண்டினதும் மொத்தத் தேறிய மாற்றல் பெறுகைகள் 4 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமையேயாகும்.

மாற்றல்களின் பேரிலான தேறிய பெறுகைகள் 1986 இன் 52 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1987 இல் பொருட்கள் பணிகளின் மீதான பற்றுக்குறையில் 59 சதவீதத்தினே நிதியிடப் போதுமானதாக இருந்தன. இது முன்னேய ஆண்டிலும் பார்க்கக் குறைவான நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை ஏற்பட உதவியது. 1987 இல் நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை 1986 இன் சிஎஉ 3,630 இலட்சங் கொண்ட பற்றுக்குறைக்கெதிராக சிஎஉ 2,660 இலட்சங்களென மதிப்பிடப்பட்டு 27 சதவீதங் கொண்ட குறைப்பினேப் பிரதிபலித்தது. நடைமுறைக் கணக்கு நிலுவை இரண்டாவது ஆண்டாக முன்னேற்றத்தினேப் பதிவு செய்தபோதும் இன்னமும் கவலேக்குரிய மட்டத்திலேயே இது காணப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாகப் பார்க்கையில் நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை 1985 இன் 6.9 சதவீதத்திலிருந்து 1986 இல் 6.6 சதவீதத்திற்கும், 1987 இல் 5.2 சதவீதத்திற்கும் வீழ்ச்சியுற்றது.

1982 ஆம் ஆண்டிலிருந்து கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருந்த நாணயமல்லா மூலதனத்தின் உட்பாய்ச்சல் 1987 இல் 33 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமையின் மூலம் அத்தகைய உட்பாய்ச்சல்கள் மேலும் பின்னடைவினேக் கொண்டிருந்தன. இதற்கு அலுவல்சார் மூலதனப் பாய்ச்சல்கள் 42 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். 1987 இல் அலுவல்சார் மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல் 1986 இன் சிஎஉ 2,510 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் சிஎஉ 1,460 இலட்சமாக விளங்கியது. வீழ்ச்சி செயற்றிட்ட, பண்டக் கடன்கள் இரண்டினதும் பகிர்ந்தளிப்பில் தெளிவாகக் காணப்பட்டது. மறுபுறத்தில் தனியார் மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1986 இன் சிஎஉ 280 இலட்சத்திலிருந்து 1987 இல் சிஎஉ 410 இலட்சத்திற்கு உயர்வடைந்தன.

நாணயம் அல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறையின் 70 சதவீதத்தினே மட்டுமே நிதியிடப் போதுமானதாக இருந்தமையால் சிஎஉ 720 இலட்சம் கொண்ட திரண்ட பற்றுக்குறையை வெளிநாட்டுச் சொத்துக்களின் எடுப்பனவின் மூலம் நிதியிடவேண்டியிருந்தது. இதன் காரணமாக 1987 இல் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 15 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த மூன்ருவது ஆண்டாக இது விளங்கியதுடன் 1985 இலும், 1986 இலும் இது தொடர்பான வீழ்ச்சிகள் முறையே 17 சதவீதமாகவும், 19 சதவீதமாகவும் இருந்தன. 1987 இறுதியில் மொத்த வெளி

நாட்டுச் சொத்துக்கள் 1986 இன் இறுதியிலிருந்த சிஎஉ 4,920 இலட்சத்துடன் (ரூ. 171,520 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 4,150 இலட்சமாக (ரூ. 181,340 இலட்சம்) விளங்கியது. 1987 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1987 இற்காக மதிப்பிடப்பட்ட இறக்குமதிகளில் ஏறத்தாழ மூன்று மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது.

உலகம் முழுவதும் செலாவணி வீதங்கள் பெருமளவிற்குத் தளம்பலுறுகின்ற பின்னணியில், பெரும்பாலான பன்னாட்டு நாணயங்கள் ஐ.அ. டொலருக்கெதிராக உயர்வடைந்த வேளையில் 1987 இல் இலங்கை ரூபா மிக முக்கிய நாணயங்களுக் கெதிராகப் பெயரளவு நியதியில் தேய்வடைந்தது. ரூபா, யப்பானிய யென்னுக் கெதிராக 28 சதவீதத்தினாலும், ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 27 சதவீதத் தினாலும், டியூச் மார்க்கிற்கெதிராக 24 சதவீதத்தினாலும், பிரான்சிய பிராங்கிற் கெதிராக 22 சதவீதத்தினாலும் தேய்வடைந்தது. ரூபா, இந்திய ரூபாவிற்கெதிராக 10 சதவீதத்தினாலும், ஐ.அ. டொலருக்கெதிராக 7 சதவீதத்தினாலும் தேய் வடைந்தது. சிஎஉ இற்கெதிராக ஐ.அ. டொலர் தேய்வடைந்தமையைப் பெரு மளவிற்குப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1987 இல் ரூபா சிஎஉ விற்கெதிராக 20 சதவீதத்தினால் தேய்வடைந்தது. இலங்கை வர்த்தகப் பங்காளர்களின் கூடை நாணயங்களினால் அளவிடப்பட்டவாறு 1987 இல் இலங்கை ரூபாவின் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதங்கள் 20 சதவீதத்தினால் தேய்வுற்றவேளையில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள் அதாவது இலங்கைக்கும் அதன் வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையிலான பணவீக்க வேறுபாடுகளுக்காகச் சீராக் கம் செய்யப்பட்ட பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் 17 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

வெளிநாட்டுப் படுகடனின் வளர்ச்சி வீதம் அண்மை ஆண்டுகளில் கவலைக் குரிய விடயமாக இருக்கின்ற உண்மையை 1986 ஆம் ஆண்டறிக்கை எடுத்துக் காட்டியது. 1987 இல் குறுங்காலக் கடன்கள், வர்த்தகக் கொடுகடன்கள், மத்திய வங்கிக் கடன்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 1986 இன் ரூ. 1,164,290 இலட்சத்தி லிருந்து (சிஎஉ 33,590 இலட்சம்) 1987 இல் ரூ. 1,445,310 இலட்சத்திற்கு (சிஎஉ 33,610 இலட்சம்) அதிகரித்தது. இதனால் 1987 இல் ரூபா நியதிகளில் வெளிநாட்டுப் படுகடன் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தவேளையில் (24 சத வீதம்) சிஎஉ நியதிகளில் அதிகரிப்பு மிகக் குறைவாக இருந்தது. ரூபா நியதிகளில் வெளிநாட்டுப் படுகடனில் காணப்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பு ரூபா தேய்வடைந்தமையினால் பெருமளவிற்கு ஏற்பட்டது. இதன் விளைவாக, மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வெளிநின்ற படுகடனின் விகிதம் 1986 இன் 62 சத வீதத்திலிருந்து 1987 இல் 64 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இவ்வாண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பெருமளவு மீள் கொள்வனவுகளைத் (அதாவது மீள் கொடுப்பனவுகள்) தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியத்திற்கான வெளி நாட்டுக் கடன்பாடுகள் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக 1986 இன் சிஎஉ 2,340 இலட்சத்திலிருந்து 1987 இல் சிஎஉ 1,650 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

நடுத்தர, நீண்டகாலக் கடன்கள் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், அனைத்து வெளிநாட்டுக் கடன்கள் மீதுமான வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற் றை உள்ளடக்கிய வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்தப் பணிக் கொடுப்பனவு கள் 1986 இன் ரூ. 116,580இலட்சத்திலிருந்து (சிஎஉ 3,560 இலட்சம்) 1987இல்

ரூ. 148,670 இலட்சத்திற்கு (சிஎஉ 3,910 இலட்சம்) அதிகரித்தபோதும் சிஎஉ நியதிகளில் இவை பெரும்பாலும் மாற்றமின்றியிருந்தன. இதற்கு ஐ.அ. டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையும், வட்டி வீதங்கள் கீழ்நோக்கிக் குறைவடைந்து படுகடன் பணியின் உண்மைச் செலவுகளை மட்டுப்படுத்துதற்கு உதவியமையும் காரணமாகும். பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகளின் மீள் கொள்வனவுகளை உள்ளடக்கிய மொத்தக் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 1986 இன் ரூ. 69,400 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,130 இலட்சம்) 1987 இல் ரூ. 97,430 இலட்சங்களுக்கு (சிஎஉ 2,560 இலட்சம்) 20 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், பன்னாட்டு வட்டி வீதங்கள் இலகுவாக்கப்பட்டதன் காரணமாக 1987 இல் வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 1,350 இலட்சத்திற்கு 5.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் படுகடன் பணி விகிதம் அதாவது பொருட்கள் பணிகளின் ஏற்றுமதி விகிதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1986 இன் 26.4 சதவீதத்திலிருந்து 1987 இல் 28.5 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. பன்னாட்டு நாணய நிதிய கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலான விகிதம் 1987 இல் 22 சதவீதமாக இருந்தவேளையில் திரண்ட படுகடன் பணி விகிதம் அதாவது அலுவல்சார் மாற்றல்கள் நீங்கலான நடைமுறைக் கணக்குப் பெறுகைகளின் விகிதமாக மொத்தப் பணிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 22 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 23.8 சதவீதமாக விளங்கின.

1987 இல் சென்மதி நிலுவை அபிவிருத்திகள் இலங்கையின் வெளிநாட்டுத் துறையில் தொடர்ந்துவரும் உறுதியின்மையை எடுத்துக் காட்டுவதுடன் இது மொத்தப் பொருளாதாரச் செயலாற்றத்தின்மீது கடுமையான சிக்கல்களையும் ஏற்படுத்தியது. ஏற்றுமதிப் பக்கத்தில், உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் தொடர்ந்து ஏற்றுமதி அளவு குறைவடைந்தமையினால் முக்கிய முதல்தர பண்ட ஏற்றுமதிகளின் அதிகரித்த விலைகளின் முழுப் பயனையும் நாடு பெறமுடியாதிருந்தது. உள்நாட்டுக் குழப்பங்களினால் எழும் பாதகமான பிரச்சாரத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சுற்றுலாக் கைத்தொழில் 1987 இல் மேலும் பாதிக்கப்பட்டதுடன் அதன் வருவாய் 1980 இற்குப் பின்பு அதிகுறைந்த மட்டத்தினைப் பதிவு செய்தது. இறக்குமதிகள் விடயத்தில் பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெயின் விலைகளில் ஏற்பட்ட உயர்ச்சி மொத்த இறக்குமதிச் செலவை உயர்ந்த மட்டத்தில் பேணச் செய்தவேளையில் வளர்ந்துவரும் வெளிநாட்டுப் படுகடன் கடப்பாடுகள் கொடுப்பனவுப் பக்கத்தில் தாக்கத்தினைத் தொடர்ந்தும் ஏற்படுத்தின. இவ்வபிவிருத்திகளின் தாக்கத்தின் கீழ் சென்மதி நிலுவை நிலை தொடர்ந்தும் உறுதியற்றதாக விளங்கிச் செலாவணி வீதத்தின்மீது தொடர்ந்தும் தாக்கத்தினை ஏற்படுத்தியதோடு வெளிநாட்டுச் சொத்துக்களை மேலும் பாதிப்படையச் செய்தது.

1987 இல், அரசின் நிதிச் செயலாற்றம் அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் இறை முறை எவ்வகைத் தாக்கங்களின்கீழ்ச் செயற்படுகின்றதோ அதைத் தொடர்ந்தும் எடுத்துக் காட்டியது. தற்காலிகத் தரவுகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக வரவுசெலவுத் திட்டக் குறை (நன்கொடைகளின் பின்) 1986 இன் 10.1 சதவீதத்திலிருந்து 1987 இல் 8.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த வரவுசெலவுத் திட்ட நிலைமையில் இது ஓர் முன்னேற்றமாகக் காணப்பட்டபோதும் இறுதி விளைவில் இது அவ்வாறில்லை. அரச அரசிறையின் வளர்ச்சி வீதத்தினைவிட நடைமுறைச் செலவின் வளர்ச்சி கூடுதலாக உள்ள தாக்கத்தின்கீழ் நடைமுறைக் கணக்குமிகை குறைக்கப்பட்டு 1986 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.8 சதவீதத்திலிருந்து 1987 இல் 1.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, விரிவாக்கக் குறை அதாவது, வங்கிக்

கொடுகடனிலிருந்து நிதியிடப்படவேண்டிய வரவுசெலவுத் திட்டக் குறையின் பங்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சதவீதத்திலிருந்து 1.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. இவ்வபிவிருத்திகள் பல ஆண்டுகளாகப் பொருளாதார உறுதியின்மைக்கு முதன்மை மூலமாக விளங்கிவரும் இறைத்தாக்கம் தொடர்ந்தும் இருந்து வருவதனை எடுத்துக் காட்டுகின்றது.

மொத்த அரசிறை ரூ. 421,550 இலட்சமாக விளங்கி, 13 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்ததுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் அரசிறை 1986 இன் 20.8 சதவீதத்திலிருந்து 1987 இல் 21.4 சதவீதமாக அதிகரித்தது. வரி அரசிறையும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 1986 இன் 17.4 சதவீதத்திலிருந்து 1987 இல் 17.9 சதவீதத்திற்கு உயர்ந்து அதிகரிப்பொன்றைப் பதிவு செய்ததுடன் அரச அரசிறையின் வளர்ச்சி வீதம் வருவாயின் வளர்ச்சி வீதத்தினைவிடக் கூடிய வேகத்தில் பேணப்பட்டதை எடுத்துக் காட்டியது. 1987 இல் முன்னைய ஆண்டின் அதே வீதமாக மொத்த அரசிறையில் வரி அரசிறை 83 சதவீதத்திற்குப் பங்களித்தது.

செலவுப் பக்கத்தில் நடைமுறைச் செலவு ரூ. 387,130 இலட்சமாக விளங்கி 14 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்ததுடன் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக 1986 இன் 18.9 சதவீதத்திலிருந்து 1987 இல் 19.7 சதவீதமாக உயர்வடைந்தது. பண்டங்கள், பணிகள் மீதான அரசின் செலவு ரூ. 176,400 இலட்சமாக விளங்கி இச்செலவின் ஏறத்தாழ அரைப் பங்கிற்கு வகை கூறியது. அரச படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 26 சதவீதத்தினைக் கொண்டிருந்தவேளை அரச கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்கள், குடியிருப்பாளர்கள் ஆகியவற்றிற்கான நடைமுறை மாற்றல்கள் 28 சதவீதத்திற்கு வகை கூறின.

அரசிறை, நன்கொடைகள் மூலமாகத் திரட்டிய மொத்த வரவு செலவுத் திட்ட மூலவளங்கள் ரூ. 466,790 இலட்சமாக விளங்கியதுடன் இது 1987 இல் 14 சதவீதமான அதிகரிப்பாகவும் இருந்தது. மறுபக்கத்தில் பெரும்பாலும் மூலதனச் செலவில் ஏற்பட்ட 4 சதவீதக் குறைப்பின் விளைவாக மொத்தச் செலவு ரூ. 630,590 இலட்சமாக விளங்கி 7 சதவீத அதிகரிப்பினை மட்டுமே பதிவு செய்தது. இதன் விளைவாக வரவு செலவுத் திட்டக் குறை (நன்கொடைகளின் பின்னர்) ரூ. 163,800 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் குறையினைவிடக் குறைவானதாகக் காணப்பட்டது. இது குறிப்பிடப்பட வேண்டியதொரு சாதனையாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் முழுமையான குறை 1986 இன் 10.1 சதவீதத்திலிருந்து 1987 இல் 8.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக நோக்குகையில் நன்கொடைகளுக்கு முன்பான மொத்த வரவுசெலவுத் திட்டக் குறையும் 12.2 சதவீதத்திலிருந்து 10.6 சதவீதமாக இரு ஆண்டுக் காலத்தில் வீழ்ச்சியடைந்தது.

வரவு செலவுத் திட்டக் குறை முன்னைய ஆண்டிலிருந்து கணிசமானளவு முன்னேற்றமாக விளங்கிய போதிலும் குறையினை நிதியிடுவதற்கான மூலவளங்கள் 1987 இல் குறைவாகவே கிடைக்கக்கூடியதாக இருந்தது. வெளிநாட்டுக் கடன்கள் மூலமாகக் கிடைக்கத்தக்க மூலவளங்கள் ரூ. 57,160 இலட்சமாக விளங்கியதுடன் இது முன்னைய ஆண்டினைவிட 37 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது. இவ்வாறு அண்மைய ஆண்டுகளின் வரவு செலவுத் திட்டக் குறையின் ஏறத்தாழ அரைப் பங்கினை நிதியிட்ட வெளிநாட்டுக் கடன்கள் 1987 இல் மூன்றிலொரு

பங்கினை மட்டும் வழங்கின. வங்கியல்லா உள்நாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கத் தக்க மூலவளங்களும் ரூ. 63,990 இலட்சமாக விளங்கி 5 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. எனவே, 1987 இல் வரவு செலவுத் திட்டக் குறையினை நிதியிடுவதற்கு முன்னைய ஆண்டினைவிடக் கூடியளவான மூலவளங்களை வங்கித்தொழில் மூலங்களி லிருந்து பயன்படுத்த வேண்டியிருந்தது. வங்கித்தொழில் முறையிலிருந்து பெறப் பட்ட மூலவளங்கள் ரூ. 35,410 இலட்சமாக விளங்கி 1987 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.8 சதவீதத்தினைப் பிரதிபலித்தன. 1986 இல் விரிவாக் கக் குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.7 சதவீதமாக விளங்கியது.

1987 இன் பொதுவான இறைத் தொழிற்பாடு வரவு செலவுத் திட்ட மூலவளங்களைத் திரட்டுவதில் தொடர்ச்சியான முயற்சி பெருமளவு பொருளா தார உறுதிப்பாட்டினைப் பெறும் பொருட்டுச் செலவினத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றிற்கான தேவையினை எடுத்துக் காட்டுவதாகத் தெரிகிறது. மொத்த அரசிறைச் சேகரிப்பு 13 சதவீதத்தினால் அதிகரித்து அரசிறைப் பக்கத்தில் முன்னேற் றமான செயலாற்றத்தைக் காட்டியபோதிலும் நடைமுறைச் செலவு சிறிதளவு கூடிய அதிகரிப்பான 14 சதவீதத்தினைப் பதிவு செய்தது. வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்கான வெளிநாட்டுக் கொடைகளின் பாய்ச்சல் அதிகரித்த வேளையில் நீண்டகாலக் கடன்களின் பயன்பாட்டில் கடுமையான வீழ்ச்சி காணப்பட்டது. உள்நாட்டுச் சந்தை மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்க மூலவளங்களின் அளவிலும் வீழ்ச்சி காணப்பட்டது. இவை யாவும் அண்மைய ஆண்டுகளில் பண நிரம்பல், விலைகள், சென்மதி நிலுவை போன்றனமீது தொடர்ந்துவரும் தாக்கத்திற்கு முக்கிய பங்களிப்புக் காரணியான விரிவாக்கக் குறையினை உயர்ந்தளவில் ஏற் படுத்துவதற்கு உதவின. விரிவாக்க நிதியிடலின் பாதகமான விளைவுகளைக் கட்டுப் பாடான நாணயக் கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் குறுகிய காலத்தில் ஓரளவு சமாளிப்பதற்கு இயலுமாயினும் நீண்ட காலத்தில், அளவுக்கதிகமான நாணயக் கட்டுப்பாடுகள் எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியனவாக இருக்கும். மேலும், அரச படுகடன்கள் மீதான பணிக் கொடுப்பனவுகளில் ஏற்படும் அதிகரி ப்புகள் நாட்டின் இறை அமைப்பின்மீது மேலதிகத் தாக்கத்தினைத் தொடர்ந்தும் ஏற்படுத்தின. இவ்வபிவிருத்திகள் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களுக்கும் செலவுக் கடப்பாடுகளுக்கும் இடையே நெருங்கிய சமநிலையை ஏற்படுத்தும் வகையில் இறை வழிமுறைகளில் ஒருமுகமான திட்டமிடப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டியதன் தேவையை எடுத்துக் காட்டும்.

உள்நாட்டுக் கொடுகடனில் உறுதியான வளர்ச்சியும் போலி நாணயத்தின் விரிவாக்கத்தில் கூடியளவு மீட்சியும் காணப்பட்ட சூழலில் 1987 ஆம் ஆண்டு நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சியில் கணிசமானளவு வளர்ச்சியைக் கண்டது. கொடுகடனில் கடுமையான வளர்ச்சி காணப்பட்டபோதிலும் வர்த்தக வங்கித் தொழில் முறை திரவத்தன்மையாக விளங்கி குறுகியகால அரச பத்திரங்களில் (திறைசேரி உண்டியல்) கணிசமானளவு முதலீடுகளை மேற்கொள்ளுவதற்கு இயலு மானதாக இருந்தது. இப்பின்னணியிலும் மத்திய வங்கியால் ஒதுக்குத் தேவையில் மேற்கொள்ளப்பட்ட மேலுமொரு குறிப்பிடத்தக்க தளர்வின் உதவியோடும் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையத் தொடங்கினவெனினும் மிகமானதாக இருந்தது. 1985, 1986 காலப்பகுதியில் மேலதிக திரவத் தன்மையை உறிஞ்சுவதற்கு நாணய விதிச் சட்டத்தின் 91 ஆம் பிரிவின்கீழ் அதன் சொந்தப் பிணைகளை வழங்கிய மத்திய வங்கி 1987 இல் இந்நோக்கத்திற்காகத் திறைசேரி உண்டியல் சந்தையின் துரிதப்படுத்தலில் கூடியளவிற்கு நம்பியிருந்தது. இந்நோக்கில் திறை சேரி உண்டியல் சந்தைக்குக் கூடியளவு சந்தை வசதிகளை அளிப்பதற்காகப்

## அட்டவணை 1.4

## அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... | 26,790 | 37,354 | 39,556 | 40,991 | 46,679 |
| மொத்த அரசிறை ... ... | 23,317 | 34,061 | 36,249 | 37,238 | 42,155 |
| வரி அரசிறை ... ... | 19,912 | 29,939 | 30,442 | 31,272 | 35,127 |
| வரியல்லா அரசிறை ... ... | 3,405 | 4,122 | 5,807 | 5,966 | 7,028 |
| கொடைகள் ... ... | 3,473 | 3,293 | 3,307 | 3,753 | 4,524 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... ... | 39,637 | 47,837 | 55,234 | 59,193 | 63,059 |
| நடைமுறை ... ... | 22,002 | 24,630 | 32,645 | 33,966 | 38,713 |
| மூலதனம் ... ... | 15,863 | 19,915 | 21,530 | 23,236 | 22,969 |
| மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | 1,772 | 3,292 | 1,059 | 1,991 | 1,377 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) ... | 1,315 | 9,431 | 3,604 | 3,272 | 3,442 |
| வரவு செலவுத்திட்டக் குறை (கொடைக்கு முன்) ... ... | — 16,320 | — 13,776 | — 18,985 | — 21,956 | — 20,904 |
| வரவு செலவுத்திட்ட குறை (கொடைக்குப்பின்) ... ... | — 12,847 | — 10,483 | — 15,678 | — 18,203 | — 16,380 |
| நிதியிடல் ... ... | 12,845 | 10,483 | 15,678 | 18,204 | 16,380 |
| வெளிநாட்டுக்கடன்பாடு ... ... | 6,312 | 6,492 | 7,109 | 9,061 | 5,716 |
| உள்நாட்டுக்கடன்பாடு ... ... | 6,533 | 3,991 | 8,569 | 9,143 | 10,664 |
| சந்தையல்லாக்கடன்பாடுகள் ... ... | 1,977 | 951 | — 1,801 | — 669 | 724 |
| சந்தைக்கடன்பாடுகள் ... ... | 4,556 | 3,040 | 10,370 | 9,812 | 9,940 |
| வங்கியல்லா ... ... | 4,082 | 5,135 | 5,659 | 6,765 | 6,399 |
| வங்கி ... ... | 474 | — 2,095 | 4,711 | 3,047 | 3,541 |

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

| விடயம் | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் .. | 22.0 | 24.3 | 24.4 | 22.8 | 23.7 |
| மொத்த அரசிறை ... .. | 19.2 | 22.2 | 22.3 | 20.8 | 21.4 |
| வரி அரசிறை ... .. | 16.4 | 19.5 | 18.7 | 17.4 | 17.9 |
| வரியல்லா அரசிறை ... .. | 2.8 | 2.7 | 3.6 | 3.3 | 3.0 |
| கொடைகள் ... .. | 2.9 | 2.1 | 2.0 | 2.1 | 2.3 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... .. | 32.6 | 31.1 | 34.0 | 33.0 | 32.1 |
| நடைமுறை ... .. | 18.1 | 16.0 | 20.1 | 18.9 | 19.7 |
| மூலதனம் ... .. | 13.0 | 13.0 | 13.3 | 13.0 | 11.7 |
| மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | 1.5 | 2.1 | 0.9 | 1.1 | 0.9 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) .. | 1.1 | 6.1 | 2.2 | 1.8 | 1.7 |
| வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) ... .. | — 13.4 | –9.0 | –11.7 | –12.2 | –10.6 |
| வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) ... .. | — 10.6 | –6.8 | –9.7 | –10.1 | –6.5 |
| நிதியிடல் ... .. | 10.6 | 6.8 | 9.7 | 10.1 | 8.3 |
| வெளிநாட்டுக் கடன்பாடு ... ... | 5.2 | 4.2 | 4.4 | 5.1 | 2.9 |
| உள்நாட்டுக் கடன்பாடு ... .. | 5.4 | 2.6 | 5.3 | 5.1 | 5.4 |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் .. | 1.6 | 0.6 | –1.1 | –0.4 | 0.4 |
| சந்தைக் கடன்பாடுகள் ... .. | 3.7 | 2.0 | 6.4 | 5.5 | 5.1 |
| வங்கியல்லா ... .. | 3.4 | 3.3 | 3.5 | 3.8 | 3.3 |
| வங்கி ... ... | 0.4 | — 1.4 | 2.9 | 1.7 | 1.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மிதமான செலவில் பெருமளவு கொடுகடனை கிடைக்கச் செய்வதன் மூலம் பொருளாதார நடவடிக்கையினைத் துரிதப்படுத்தும் நோக்குடன் நாணயக் கொள்கையானது சிறிதளவு இலகுவாக்கப் பட்டது. சந்தை விசைகள் குறிப்பாகச் சந்தையின் குறுகிய காலத்தில் வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கினை வகிப்பதற்கு ஊக்கமளிக்கப்பட்டன. பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளில் நடவடிக்கைகளை முன்னேற்றுவதற் காக மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வசதிகள் இவ்வாண்டில் மேலும் விரிவாக் கப்பட்டன.

1987 இல், பணநிரம்பல் வளர்ச்சியின் வேகம் இரண்டு பணக் கூட்டுக் களிலும் பிரதிபலித்தது. பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் கொண்டுள்ளதாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட குறுகிய பண நிரம்பல் ($M_1$) 1986 இன் 13 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 39,040 இலட்சத்தால் அல்லது 18 சதவீதத்தால் விரிவடைந்தது. இதேவேளை $M_1$ இனையும் வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைப்புச் செய்யப்பட்ட தவணை, சேமிப்பு வைப்புக்களையும் (போலி நாணயம்) உள்ளடக்குமாறு வரைவிலக்கணப் படுத்தப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_2$) முன்னைய ஆண்டின் வளர்ச்சியான ரூ. 24,510 இலட்சம் அல்லது 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 74,750 இலட்சம் அல்லது 15 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1986 இன் ரூ. 330 இலட்சம் கொண்ட சிறு அளவிலான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 35,710 இலட்சத்தால் அல்லது 12 சதவீதத்தால் விரிவடைந்த போலி நாணயதகின் வளர்ச்சியில் ஏற்பட்ட உறுதியான மீட்சியை விரிந்த பணத்தின் அதிகரிப்பு பிரதிபலிக்கின்றது.

$M_1$ இன் விரிவாக்கம் பொதுமக்கள் வசமிருந்த நாணயத்தில் கூடியளவு செறிந்து காணப்பட்ட முன்னைய ஆண்டின் அனுபவத்திற்கு மாறாக 1987 இல் நாணயக் கூறு ரூ. 19,250 இலட்சத்தால் அல்லது 17 சதவீதத்தால் உயர்ந்த வேளையில் கேள்வி வைப்பின் கூறு ரூ. 19,790 இலட்சம் அல்லது 21 சதவீதமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. கணிசமான காலப்பகுதியில் ஏறத்தாழ 50 சத வீதமாக விளங்கி வந்த $M_1$ இலுள்ள வைப்புக்களின் விகிதம் 1983 இலிருந்து வீழ்ச்சியுறத் தொடங்கி 1986 இறுதியில் 45 சதவீதத்தை அடைந்தது. இவ் வபிவிருத்திக்கு உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக நாட்டின் சில பகுதிகளில் வழமையான வங்கித்தொழில் பணிகள் பாதிப்படைந்தமை காரணமாகும். 1987 இல் இப்போக்கில் மாற்றம் காணப்பட்டு 46 சதவீதமாக விளங்கியமை சிறி தாயினும் வரவேற்கத்தக்க ஒரு அபிவிருத்தியாகக் கருதப்படலாம்.

1987 இல் நாணய அபிவிருத்திகளில் குறிப்பிடத்தக்க விடயம் போலி நாணயத்தின் வளர்ச்சியில் காணப்பட்ட அதிகளவிலான அதிகரிப்பாகும். 1986 இன் ரூ. 330 இலட்சம் கொண்ட மிகக் குறைந்த அதிகரிப்பிற்கு அதிகளவு மாறாக 1987 இல் போலி நாணயம் ரூ. 35,710 இலட்சத்தால் அல்லது 12 சத வீதத்தால் வளர்ச்சியடைந்தது. 1985 இல் போலி நாணயத்தின் வளர்ச்சி 11 சதவீதமாகும். எனவே இதனுல் எடுத்துக் காட்டப்படுவது என்னவென்ருல் போலி நாணயத்தின் வளர்ச்சி 1986 இல் வழமைக்கு மாருன வீழ்ச்சிக்குப் பின்னர் 1987 இல் வங்கி வைப்புக்கள் கவர்ச்சிகரமான முதலீட்டு வழிமுறையாக மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டதைப் பிரதிபலிக்கும் வகையில் போலி நாணயத்தின் வளர்ச்சி வழமையான விகிதாசாரத்தை மீண்டும் பெற்றது. போலி நாணயத்தின் வளர்ச்சி முக்கியமாக ஏனைய தனியார்துறைக் கூறுகளிலிருந்து அதாவது உண்மையான

## அட்டவணை 1.5

## நாணய அளவுகள் 1983—1987

ரூபா பத்து இலட்சங்களில்

| விடயம் | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 |
|---|---|---|---|---|---|
| **உள்நாட்டுக் கொடுகடனிலேற்பட்ட மாற்றம்** ... | **6,895** | **633** | **9,300** | **4,883** | **11,457** |
| அரசுக்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | 383 | —2,979 | 5,793 | 2,198 | 4,502 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ... | —292 | —237 | 290 | 301 | 2,627 |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் அதிகரிப்பு ... | 635 | —255 | —263 | 120 | —301 |
| ஏனைய தனியார் துறைக்கான கொடுகடனின் அதிகரிப்பு ... | 6,170 | 4,104 | 3,480 | 2,263 | 4,629 |
| **தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | 815 | 6,777 | —691 | —414 | —443 |
| **மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **7,710** | **7,410** | **8,609** | **4,468** | 11,014 |
| விரிந்த பணநிரம்பலில் (M2) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 6,747 | 6,170 | 4,982 | 2,451 | 7,475 |
| ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 963 | 1,240 | 3,627 | 2,018 | 3,539 |

### நாணய அளவுகளில் சதவீத அதிகரிப்பு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுக் கொடுகடனின் சதவீத அதிகரிப்பு ... | 16.3 | 1.3 | 18.6 | 8.2 | 17.9 |
| மொத்த சொத்துக்கள், பொறுப்புக்களின் சதவீத அதிகரிப்பு ... | 17.2 | 14.1 | 14.4 | 6.5 | 15.1 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசின் சதவீதம் ... | 5.6 | —470.4 | 62.3 | 45.0 | 39.3 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசு அல்லாத்துறையின் சதவீதம் ... | 94.4 | 570.4 | 37.7 | 55.0 | 60.7 |
| விரிந்த பண நிரம்பலின் (M2) சதவீத அதிகரிப்பு ... | 22.1 | 16.6 | 11.4 | 5.1 | 14.7 |
| குறுகிய பண நிரம்பலின் (M1) சதவீத அதிகரிப்பு ... | 25.4 | 14.1 | 11.5 | 12.9 | 18.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தனியார்துறையிலிருந்து கிடைத்தது. இத்துறையின் தவணை சேமிப்பு வைப்புக்கள் ரூ. 33,840 இலட்சத்தால் அல்லது 14 சதவீதத்தால் உயர்வடைந்தன. ஒப்பிடுகையில் அரச கூட்டுத்தாபனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ரூ. 1,190 இலட்சத்தால் சிறிதளவால் அதிகரித்த வேளையில் கூட்டுறவு நிறுவனங்களினது வைப்புக்கள் ரூ. 690 இலட்சத்தால் அதிகரித்தன. எதிர்பாராத விதமாக, ஏனைய தனியார் துறைக் கூறின் போலி நாணயத்தில் ஏற்பட்ட வளர்ச்சியில் அரைப் பங்கிற்கு மேலானது ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஏற்பட்டது. சார்பு ரீதியாகக் கூடிய ஏற்றுமதி விலைகளும், வர்த்தக வங்கிகளினதும் நிதிக் கூட்டு நிலையங்களினதும் வைப்பு வீதங்களுக்கிடையான வேறுபாட்டினைக் குறைத்தமையும் இவ்வபிவிருத்திக்கு உதவிய முக்கிய காரணிகளாக விளங்கின.

1987 இல் வெளிநாட்டுத் துறையின் தொழிற்பாடுகள் நாட்டின் சென்மதி நிலுவையின் தொடர்ச்சியான நலிவுற்ற தன்மையைப் பிரதிபலிக்கும் வகையில் வெளிநாட்டுத்துறையின் கோட்பாடுகள் நாணயக் கூட்டுக்களின்மீது தொடர்ந்து மூன்றுவது ஆண்டாகச் சுருக்கத் தாக்கத்தைக் கொண்டுள்ளதாக விளங்கின. இவ்வாண்டில் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய) ரூ. 4,430 இலட்சம் அல்லது 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. 1985 இலும், 1986 இலும் இச் சொத்துக்களின் வீழ்ச்சிகள் முறையே ரூ. 6,910 இலட்சம் அல்லது 7 சதவீதம் ஆகவும், ரூ. 4,140 இலட்சம் அல்லது 4 சதவீதமாகவும் விளங்கின. 1987 இல் சென்மதி நிலுவை வெளிப்பாடு 1986 இனைவிடச் சிறு முன்னேற்றமாக விளங்கியபோதிலும் வர்த்தக, நடைமுறைக் கணக்குகள் இரண்டும் குறைந்த குறைகளைப் பதிவு செய்ததுடன் மொத்த நிலுவை சிஎஉ 720 இலட்சம் கொண்ட குறையாகக் காணப்பட்டு வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்து எடுப்பனவு செய்வதன் மூலம் நிதியிடப்பட்டது. 1984 இற்குப் பின்னர் வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் தொடர்ந்து காணப்படும் வீழ்ச்சி இலங்கையின் வெளிநாட்டுத் துறை உள்நாட்டு, வெளிநாட்டுத் தாக்கங்கள் இரண்டினாலும் பாதிக்கப்படும் தன்மையினைப் பிரதிபலிக்கின்றது. உறுதியான வெளிநாட்டுத் துறையின் அபிவிருத்திகளை ஊக்குவிப்பதற்கு உறுதிப்பாட்டினைப் பேண வேண்டிய தன் அவசியத்தை இது வலியுறுத்துகின்றது.

வெளிநாட்டுத் துறை பண நிரம்பலின்மீது சுருக்கத் தாக்கமுள்ளதாகக் காணப்பட்டதால் உள்நாட்டுக் கொடுகடனின் கடுமையான வளர்ச்சியே 1987 இல் நாணயக் கூட்டுக்களை உயர்வடையச் செய்தது. 1987 இல் உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் ரூ. 114,570 இலட்சமாக அல்லது 18 சதவீதமாக விளங்கியதுடன் இது 1986 ஆம் ஆண்டின் ரூ. 48,830 இலட்சம் அல்லது 8 சதவீத விரிவாக்கத்திலிருந்து குறிப்பிடத்தக்கதொரு எழுச்சியாகும். 1987 இல் உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தின் வளர்ச்சி அரசிற்கான தேறிய கொடுகடன், தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் ஆகிய இரண்டிலும் பிரதிபலித்தது. மொத்தத்தில் வங்கித்தொழில் முறையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 21,980 இலட்சம் அல்லது 11 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1987 இன் ரூ. 45,020 இலட்சத்தால் அல்லது 20 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, வர்த்தக வங்கிகளிலிருந்து தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 26,840 இலட்சம் அல்லது 7 சதவீதம் கொண்ட மிகவும் குறைவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 69,550 இலட்சத்தால் அல்லது 17 சதவீதத்தால் உயர்வடைந்தது

அரசு தொடர்ந்தும் வங்கிக் கொடுகடனை நாடுதல் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும். அரசிற்கான தேறிய கொடுகடனின் வளர்ச்சி உள்நாட்டுக் கொடுகடனில் அதன் பங்கினை 1986 இன் 35 சதவீதத்திலிருந்து 1987 இல் 36 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், இவ்வாண்டில் அரசிற்கான தேறிய கொடுகடன் அதிகரிப்பில் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகள் நேரடியாக வகை கூறும் அளவு ரூ. 38,190 இலட்சமாகச் சிறிது குறைந்தளவில் காணப் பட்டது. ஏனெனில் பன்னாட்டு நாணய நிதியத்தின் பொறுப்புக்களில் தொடர்ந்து வந்த மீள் மதிப்பிடலின் விளைவாக நிதியத்திற்கான இலங்கையின் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்காக அரசிற்கு மத்திய வங்கியால் வழங்கப்பட்ட ரூ. 6,830 இலட்சம் கொண்ட சிறப்புக் கடனையும் அரசிற்கான தேறிய கொடுகடன் உள்ளடக்கியிருந்தது. எனினும், 1987 இல் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக் காக அரசினால் பயன்படுத்தப்பட்ட வங்கிக் கொடுகடனின் மட்டம் கவனிக்கப்பட வேண்டியதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் கூடியளவு இறை ஒழுங்குமுறைகளை அடைவதற்கு உறுதியான தீர்வொன்றிற்கான அவசியத்தையும் எடுத்துக் காட்டு கின்றது.

1987 இல் அரசிற்கான தேறிய கொடுகடனின் வளர்ச்சி அளவுக்கு அதிக மானதாகக் காணப்பட்டாலும் வர்த்தக வங்கிகள் முக்கியமாகத் திறைசேரி உண்டியல்களில் கூடியளவு முதலீடுகளைச் செய்ததன் மூலமாக அரசிற்கான தேறிய கொடுகடன் விரிவாக்கத்திற்கு மிகப் பெரிய பங்கினை அளித்தமை அதன் வளர்ச்சி யைத் தணிக்கத்தக்க ஒரு காரணியாக விளங்கியது. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 30,350 இலட்சத்தால் உயர்வடைந்தது. ஒப்பீட்டு ரீதியில், 1987 இல் மத்திய வங்கியிலிருந்து அரசிற் கான தேறிய கொடுகடனின் அதிகரிப்பு ரூ. 14,680 இலட்சமாக விளங்கியதுடன் இது பன்னாட்டு நாணய நிதிய கொடுக்கல் வாங்கல்களின் பேரில் ஏற்பட்ட சிறப்புக் கடனை ரூ. 6,830 இலட்சத்தையும் உள்ளடக்கியிருந்தது. குறிப்பாக 1987 ஒகத்தில் நியதிச்சட்ட ஒதுக்கு விகிதத்தில் மேற்கொள்ளப்பட்ட குறைப் பினைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மை முன்னேற்றமடைந்தமை வர்த்தக வங்கிகள் பெருமளவு மூலவளங்களைத் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்ய உதவியது.

அபிவிருத்தி ரீதியில் நோக்குகையில் கொடுகடன் துறையின் அபிவிருத்தி களில் குறிப்பிடத்தக்க பண்பு யாதெனில் தனியார் துறையிலிருந்து கொடு கடனுக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகளவிலான மீட்சியாகும். 1987 இல், அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், ஏனைய தனியார்துறைத் தொகுதிகள் என்பனவற்றை உள்ளடக்கிய தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் 1986 இன் ரூ. 26,840 இலட்சம் அல்லது 7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1987 இல் ரூ. 69,550 இலட்சத்தால் அல்லது 17 சதவீதத்தால் உயர்வடைந்தது. தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனின் வளர்ச்சியின் மிகப் பெரிய பங்கு ஏனைய தனியார் துறைக் கூறுகள் தொடர்பாக விளக்கியது. 1986 இன் ரூ. 22,630 இலட்சம் அல்லது 7 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 1987 இல் ஏனைய தனியார் துறைக் கூறுகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 46,290 இலட்சத்தால் அல்லது 13 சதவீதத்தால் விரிவடைந்தது. பின்னையது

இவ்வாண்டில் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் வளர்ச்சியில் ஏறத் தாழ மூன்றில் இரண்டு பங்கிற்கு வகை கூறியது. சார்பு ரீதியாகச் சாதகமான விலைகளுடன் இணைந்த ஏற்றுமதிக் கொடுகடனுக்கான அதிகரித்த கேள்வியும் இறக்குமதிகளுக்கும் அதனோடிணைந்த வர்த்தக நடவடிக்கைகளுக்குமான அதிகரித்த கொடுகடன்களின் பயன்பாடும் குறிப்பாக இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி யின் சூழலில் ஏனைய தனியார்துறைக் கூறுகளுக்கான வங்கிக் கொடுகடனை இவ்வாண்டில் உயர்மட்டத்தில் பேணின.

1987 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1986 இன் ரூ. 3,010 இலட்சம் அல்லது 7 சதவீதம் 1985 இன் ரூ. 2,900 இலட்சம் அல்லது 7 சதவீதம் ஆகிய சிறு அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 26,270 இலட்சத்தால் அல்லது 55 சதவீதத்தால் கணிசமானளவால் அதிகரித்தது. முன்னைய ஆண்டில் கணிசமானளவு வங்கிக் கடன்பாடுகளை நாடிய இரு பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களான இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் 1987 இல் மீண்டும் வங்கிக் கொடுகடனை அதிகளவுக்கு நாடின. எனினும், 1987 இன் கடன்பாடுகள் திரவத் தன்மைப் பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்காக அல்லாது அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் அபிவிருத்திக்காக நடுத்தர கால முதலீட்டுச் செயற்றிட்டங்களைச் செயற்படுத்துவதற்கானதாக விளங்கியது. மசகு எண்ணெய் விலைகளில் காணப்பட்ட மேல்நோக்கிய அசைவு, பராமரிப்பு நோக்கங்களுக்காகச் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருக்கும் காலத்தில் எழும் கேள்வியினை ஈ செய் வதற்காக முடிவுப் பொருட்களின் இருப்புக்களை வைத்திருக்க வேண்டியிருந்தமை என்பன காரணமாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கூடியளவு கொடு கடனைப் பயன்படுத்தியது. 1987 இல் வங்கிக் கொடுகடனுக்கான நாடலை அதிகரித்த மற்றுமொரு கூட்டுத்தாபனம் கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய மாகும். இது அத்தியாவசிய உணவு விடயங்களின் தொகையான இறக்குமதிக் கானதாக விளங்கியது. எனினும் பல கூட்டுத்தாபனங்கள் இவ்வாண்டில் வங்கிக் கொடுகடனில் தங்கியிருத்தலைக் குறைத்துக் கொண்டன. அவற்றில் இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம், இலங்கை ஓட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம், இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், வியாங்கொடை புடவை ஆலை என்பன அடங்கும்.

1986 இல் ரூ. 1,200 இலட்சத்தால் அல்லது 9 சதவீதத்தால் உயர் வடைந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கான வங்கிக் கொடுகடன் 1987 இல், ரூ. 3,010 இலட்சத்தால் அல்லது 21 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சி யடைந்தது. இதற்கு வரட்சி நிலைமைகளினால் பாதிப்படைந்த பகுதிகளிலுள்ள வேளாண்மை உற்பத்திகளின் பயிர்ச்செய்கை, சந்தைப்படுத்தல் ஆகிய இரண்டு நோக்கங்களுக்குமான கடன் வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய பங்களித்த காரணியாகும்.

முன்னைய ஆண்டில் தொடங்கிய வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய அசைவு 1987 இலும் குறிப்பிட்ட வகையான முற்பணங்களினதும் வைப்புக்களினதும் குறைக்கப்பட்ட வீதங்களில் காணப்படுவதுபோற்றொடர்ந்து மிதமாக விளங்கியது. நிதி முறையிலுள்ள மேலதிக திரவத்தன்மை குறிப்பாக ஆண்டின் முதல் அரைப் பகுதியில் இவ்வசைவிற்கு ஓரளவுக்கு உதவியது. சிறு வைப்புக்களின் முதன்மைத் திரட்டுநரான தேசிய சேமிப்பு வங்கி ஆண்டு முழுவதும் நிலையான வைப்பு வட்டி வீதத்தினை ஆண்டுக்கு 13 சதவீதமாகப் பேணியிருக்காவிடின் வீழ்ச்சி சிலவேளை மிகவும் அதிகளவாகவிருந்திருக்கும்.

நிதிக் கூட்டு நிலையங்கள் தவணை வைப்புக்கள், வைப்புச் சான்றிதழ்கள் மீது போட்டி ரீதியிலான வீதங்களைத் தொடர்ந்தும் வழங்கின. உதாரணமாக ஆண்டின் கடைசிக் காலாண்டில், வர்த்தக வங்கிகளால் ஓராண்டு வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் ஆண்டுக்கு 8.5—14 சதவீத வீச்சில் காணப்பட்டமைக்கு மாறாகச் சில முக்கிய நிதிக் கூட்டு நிலையங்களால் வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் 16 சதவீதத்திலிருந்து 20 சதவீத வீச்சில் காணப்பட்டன. எனினும், 1987 திசெம்பரிலிருந்து நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பு வீதங்கள் நிதிக் கூட்டு நிலையங்களின் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட பணிப்புரைகளின் நியதிப்படி குறிப்பிட்ட சில மேல் எல்லைகளுக்கு உட்பட்டன.

மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் குறுகிய காலப் பணச்சந்தை வீதங்கள் மேலும் வீழ்ச்சியடையத் தொடங்கின. திறைசேரி உண்டியல்களுக்கான முதலாந்தரச் சந்தையில் வீதங்களை நிர்ணயிப்பதில் சந்தை விசைகள் கூடிய பங்கினை வகித்தன. திறைசேரி உண்டியல் சந்தைக்கு முதலீட்டாளர்களைக் கவரும் நோக்கில் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தையின் கழிவு வீதம் (இலாபம்) கணிசமானளவுக்குக் குறைக்கப்பட்டது. ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் வீதங்கள் ஆண்டுக்கு 8 சதவீதத்திலிருந்து 12 சதவீதம் வரை வேறுபட்டிருந்தன. எனினும், அதன் பின்னர் பொதுவான வட்டி வீத அமைப்பில் காணப்படும் கீழ் நோக்கிய போக்கிற்கு இசைவாக வீதங்கள் 8 சதவீதத்திற்கும், 11 சதவீதத்திற்கும் இடையான குறைவான வீச்சில் தளம்பல்களைக் கொண்டிருந்தன.

1987 இல் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிப்பதற்கு வட்டி வீதங்களில் கீழ் நோக்கிய திருத்தங்களை மேற்கொள்வதற்கு வசதியாக வர்த்தக வங்கித் தொழில் முறை நல்ல முறையில் வைக்கப்பட்டுள்ளது. முதலாவதாக இரு அரச வங்கிகளும் பல்வகைப்பட்ட வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட அவற்றின் வட்டி வீதங்களைக் குறைத்தன. வட்டி வீதங்களில் கீழ் நோக்கிய திருத்தங்களைச் செய்யுமாறு வர்த்தக வங்கிகளைத் தூண்டியமைக்கு மத்திய வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட சில கொள்கை மாற்றங்கள் காரணமாக இருக்கலாம். முதலாவதாக 1987 ஒகத்தில் வங்கி வீதம் ஆண்டிற்கு 1 சதவீதப் புள்ளியால் 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இரண்டாவதாக நியதிச்சட்ட ஒதுக்கு விகிதங்கள் இதே மாதத்தில் கணிசமானளவால் குறைக்கப்பட்டதுடன் இது வைப்புக்கள் பொறுப்புக்களின் மீதான சராசரி ஒதுக்கு விகிதத்தை 12.3 சதவீதத்திலிருந்து 10.0 சதவீதமாகக் குறைத்தது.

வர்த்தக வங்கிகளின் நிதிச் செலவைக் குறைவடையச் செய்யும் மேற்கூறப்பட்ட வழிமுறைகளின் செயற்படுத்தலோடு வர்த்தக வங்கிகள் தங்கள் கடன் வழங்கல் வீதங்களைக் குறிப்பிடத்தக்களவு குறைக்குமென எதிர்பார்க்கப்பட்டன. எனினும், நடைமுறையில் இவ்வாறு நிகழவில்லை என்பதுடன் வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் வீதங்களின் கீழ் நோக்கிய அசைவு மிகவும் சிறிதளவாக விளங்கியது. உதாரணமாக, 1985 இறுதியின் 20.1 சதவீதத்திலிருந்து 1986 இறுதியில் 19.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரிக் கடன் வழங்கல் வீதம் 1987 செத்தெம்பர் இறுதியில் 18.4 சதவீதத்திற்கு மட்டுமே வீழ்ச்சியடைந்தது. இதேவேளை நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்களின் கடன் வழங்கல் வீதங்கள் 1987 இல் ஏறத்தாழ மாறாதிருந்தன.

வர்த்தக வங்கிகளது வீதங்களைக் கீழ்நோக்கிக் குறைப்பதில் உள்ள நெகிழ்ச்சி யற்ற தன்மையில் காணப்படும் பிரச்சனை கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயம் என்பது பற்றி கடந்த ஆண்டின் ஆண்டறிக்கையில் கூறப்பட்டது. கொள்கை மாற்றங்கள், சந்தை அபிவிருத்திகள் என்பவற்றுக்கு ஏற்ப வட்டி வீதங்கள் போதியளவிற்கு இவ்வாறு கீழ்நோக்கி அசையாமை பெரும்பாலும் அரசதுறை வங்கிகளின் செல்வாக்கைக் கொண்ட இலங்கையின் வர்த்தக வங்கித் தொழில் அமைப்பினது சிலர் உரிமைத் தன்மையைப் பிரதிபலிப்பதாகத் தோன்று கின்றது. செறிவான வங்கிக் கிளை அமைப்பு, பாதுகாப்புத் தொடர்பான உயர்ந்த செலவுகள் என்பவற்றால் ஓரளவிற்கு இவ்வங்கிகளது நிருவாகச் செலவு கள் சுமைமிக்கதாக இருந்தது. இவ்வங்கிகள் தமது தொழிற்பாடுகளை ஓரளவிற்கு இலகுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டதுடன் வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் சந்தைச் சக்திகள் பெரும்பங்கினை வகிக்க வேண்டின் இவ்வழிமுறைகள் தீவிரப் படுத்தப்பட வேண்டும்.

1987 ஆம் ஆண்டு நாணயக் கொள்கை சிறிதளவு நெகிழ்ச்சித் தன்மையைக் கொண்டிருந்தது. நியதிச்சட்ட ஒதுக்குத் தேவைகளின் குறைப்பு, மத்திய வங்கியி லிருந்து கிடைத்த மீள்நிதியிடல் வசதிகள் மேலும் அதிகரிக்கப்பட்டமை என்ப வற்றில் இதனைக் காணக்கூடியதாக உள்ளது. ஆண்டின் முதல் அரைப்பகுதியின் விலை அசைவுகளில் காணப்பட்ட சார்பு ரீதியில் உறுதியான நிலைகளைக் கருத்திற் கொள்கையில் பொருளாதார நடவடிக்கைக்குத் தூண்டுதல் வழங்கும் வகையில் நாணயக் கொள்கையினை மிதமாக எளிதாக்கல் விரும்பத்தக்கதெனக் கருதப் பட்டது.

1984 இல் அறிமுகப்படுத்தப்பட்ட "ஒதுக்குத் தேவை முறை*" யின் கீழ் சிறப்பு ஒதுக்கினைப் பேணவேண்டிய தேவை புறக்கீடு செய்யப்பட்டதுடன் 1986 இன் முற்பகுதியில் வர்த்தக வங்கிகளின் ஒதுக்குப் பிரச்சனையை இலகுவாக்கும் செயல்முறை ஆரம்பித்தது. அடுத்த கட்டம் 1983 திசெம்பரில் விதிக்கப்பட்ட பயன்படுத்தப்படாத மேலதிகப் பற்று நிலுவைகளுக்கு எதிராகப் பேணப்பட வேண்டிய ஒதுக்குத்தேவை 1987 யூனில் புறக்கீடு செய்யப்பட்டமையாகும். இறுதியானது 1987 ஒகத்தில் செய்யப்பட்ட மீளாய்வாகும். இதில் 10 சத வீதத்திற்கும் 18 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டமைந்த பல்வேறு வைப்புக் கள் மீதான ஒதுக்கு விகிதங்கள் 10 சதவீதமாக ஒருமிக்கப்பட்டு, வர்த்தக வங்கிகளின் எல்லா வகையான வைப்புப் பொறுப்புக்களுக்கும் பொருத்தமுடைய தாக்கப்பட்டது. இம்மீளாய்வின் விளைவாக வைப்புப் பொறுப்புக்கள் மீதான சராசரி ஒதுக்கு விகிதம் 12.3 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்து ஒதுக்குகளைப் பேணும் செலவினைக் குறைவடையச் செய்தது.

---

* இவ் ஒதுக்குத்தேவை முறைபற்றிய விபரம் 1984ஆம் ஆண்டு ஆண்டறிக்கையின் பகுதி IIஇன் பக்கம் (VI)இல் தரப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் முன்னுரிமைத்துறைகளுக்குக் குறுந்தவணை, நடுத்தர தவணை கடன்வழங்கலை மேலும் ஊக்குவிக்கும் முகமாக மத்திய வங்கி தொடர்ந்தும் வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய சில நிதி நிறுவனங்களுக்கும் மீள்நிதியிடல் வசதிகளை வழங்கியது. வங்கியினால் பல்வேறுவகைத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற மீள்நிதியிடல் 1987 இல் ரூ. 3,440 இலட்சங்களால் விரிவுபடுத்தப்பட்டு இவ்வாண்டின் முடிவில் ரூ. 34,960 இலட்சத்தினை அடைந்தது. நடுத்தர நீண்ட தவணை முதலீட்டினை முன்னேற்றுவதற்கு இவ்வாண்டில் வங்கியின் பொதுவான மூலங்களிலிருந்து ரூ. 2,500 இலட்சம் கொண்ட தொகை நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியத்திற்கு மாற்றப்பட்டதன் மூலம் இந்நிதியத்தின் மீள்நிதியிடல் இயலளவு ரூ. 12,750 இலட்சங்களுக்கு உயர்ந்தது.

முன்னர் குறிப்பிட்டவாறு, 1987 சனவரி தொடக்கம் முதலாந்தரத் திறைசேரி உண்டியல்களின் மீதான விலைவினைத் தீர்மானிப்பதில் சந்தைச் சக்திகள் பெரும் பங்கினை வகித்தன. இதே சமயம் மத்திய வங்கியினால் விற்கப்படும் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல்கள் மீதான விலைவினைக் குறைத்ததன் மூலம் வர்த்தக வங்கிகளும் ஏனைய பங்குதாரர்களும் அதிக அளவில் முதலாந்தரச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தூண்டப்பட்டனர். மேலும் திறைசேரி உண்டியல் வாராந்த வழங்கல்கள் வங்கிகளின் திரவ நிதியங்களை முதலீடு செய்வதற்கான குறுங்காலப் பத்திரங்களின் ஒழுங்கான நிரம்பலை உத்தரவாதம் செய்யவும் உதவின. இதே வேளையில் மத்திய வங்கியின் பிணைகள் மீதான நறுக்கு வீதத்தில் ஏற்பட்ட குறைப்பும், முதிர்ச்சிக் காலம் ஆறு மாதங்களிலிருந்து ஒரு ஆண்டுக் காலத்திற்கு விரிவுபடுத்தப்பட்டமையும் முதலாந்தரத் திறைசேரி உண்டியல்களை மேலும் கவர்ச்சிகரமாக்கின. இதனைத் தொடர்ந்து மத்திய வங்கியல்லா மூலங்களின் திறைசேரி உண்டியல் உடைமைகள் 1986 இறுதியின் ரூ. 40,590 இலட்சத்திலிருந்து 1987 இறுதியில் ரூ. 75,620 இலட்சத்திற்கு அதிகரித்து மொத்த வெளிநின்ற திறைசேரி உண்டியல்களில் 25 சதவீதத்திற்கு வகைகூறின.

தேசிய கொடுகடன் திட்டத்தின் கீழ்க் கொடுகடனின் துறைவகைப்படியான ஒதுக்கலின் நியதிப்படி கொடுகடனின் போக்கில் மத்திய வங்கி தொடர்ந்தும் செல்வாக்கினைக் கொண்டிருந்தது. இந்தத் திட்டம் வர்த்தக வங்கிகள், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் நீண்டகாலக் கொடுகடன் நிறுவனங்கள் என்பவற்றால் தனியார்துறைக்கு வழங்கப்படும் கடன்களை உள்ளடக்கியிருந்தது. 1987 இற்கான கொடுகடன் திட்ட நியதிகளின்படி தனியார்துறைக்கான வர்த்தக வங்கியின் கொடுகடன் (அரச கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்களும் ஏனைய தனியார்துறைக் கூறுகளும்) 13 சதவீதத்தால் உயரும் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் தனியார்துறைக் கொடுகடனின் வளர்ச்சியானது ரூ. 22,360 இலட்சம் அல்லது 41 சதவீதத்தினால் அதன் இலக்கினை விஞ்சியது. வேளாண்மை நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட அதிக அளவிலான கொடுகடன், குறிப்பாக நடுத்தர முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட கடன்களே இதற்குப் பெரிதும் பொறுப்பாக இருந்தன. நிறுவனங்களின் வளர்ச்சியும், முன்னுரிமைத் தேவைகள் விரிவடைந்தமையும் துறைவகைப்படியான அடிப்படையில் கொடுகடன் தேவைகளைச் சரியாக மதிப்பிடுவதில் சில சமயங்களில் பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றது.

பொருளாதாரத்தில் மிதமிஞ்சிய திரவத் தன்மை காணப்பட்டபோதிலும் மூலதனச் சந்தையின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மிதமாகக் காணப்பட்டன. இவ்வாண்டில் வழங்கப்பட்ட புதிய பங்குகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டினைப் போன்று ஐந்தாக மட்டுமே இருந்தது. எனினும் வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி முன்னைய ஆண்டின் வழங்கல்களின் பெறுமதியான ரூ. 1,300 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 2,060 இலட்சங்களாக விளங்கியது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியினால் எவ்வித வரிச் சிறப்புரிமைகளும் இல்லாது வழங்கப்பட்ட ரூ. 1,740 இலட்சங் கொண்ட இரு வழங்கல்கள் 1987 இன் முதலாந்தரப் பங்குச் சந்தையில் முன்னணி வகித்தன. பங்குச் சந்தைப் பிரச்சினைகளின் ஏமாற்றமளிக்கும் செயலாற்றம் சந்தையின் நிரந்தரமற்ற தன்மையினைப் பிரதிபலித்தது. சந்தையினை மேலும் முன்னேற்றுவதற்கான ஒரு வழியாக அரசு 1987 இல் பிணையங்கள் பேரவைச் சட்டத்தினை இயற்றியது. இது புதிய பிணையங்கள் பேரவையினால் கண்காணிக்கப்படும் ஒழுங்கான பங்குச் சந்தையின் தொழிற்பாட்டுக்கான சட்டரீதியான அமைப்பினை உருவாக்கியது.

முன்னர் குறிப்பிடப்பட்டவாறு 1987 இல் இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றத்தினை அதன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில காரணிகள் உட்பட பல காரணிகள் பாதித்தன. வேளாண்மைத்துறையில் பாதகமான வானிலை நிலைமைகளும் தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்களும் வெளியீட்டினைக் குறைவடையச் செய்தன. சுற்றுலாத்துறையும் மீன்பிடித் தொழிலும் உள்நாட்டுக் குழப்பங்களினால் பாதிப்படைந்தன. நீரேந்து பகுதிகளில் காணப்பட்ட நீண்ட வரட்சி நிலைமைகள் நீர் மின்வலு உருவாக்கத்தினைக் கட்டுப்படுத்தியதுடன் மின்வெட்டுக்கள் கைத்தொழில் உற்பத்தியினைப் பாதித்தன. இவற்றின் தாக்கத்தினால் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 1977 இன் பொருளாதாரச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து பத்து ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட மெச்சத்தக்க வளர்ச்சியின் பின்னர் 1.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. உண்மையில் குடித்தொகை வளர்ச்சிக்கு இடமளித்து நோக்குகையில் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி தலைக்குரிய உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியினை அதன் வீழ்ச்சியிலிருந்து தடுப்பதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. உள்நாட்டுக் குழப்பங்கள் வளர்ச்சியினைப் பாதித்த 1971 ஆம் ஆண்டு தொடக்கமான காலப்பகுதியில் 1987 இன் பொருளாதார வளர்ச்சியே ஆகக் குறைவானதாகும். உறுதியான பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய நிலையானதும் அமைதியானதுமான நிலைமைகளின் தேவையினை இது வலியுறுத்துகின்றது.

சென்மதி நிலுவையானது வர்த்தக, நடைமுறைக் கணக்குகள் இரண்டிலும் குறைந்த அளவிலான குறையினைக் காட்டிச் சிறு முன்னேற்றத்தினைக் கொண்டிருந்த போதிலும் திரண்ட குறையானது வெளிநாட்டு உறுதிப்பாட்டின்மீது கவனம் செலுத்தப்படவேண்டிய அளவிற்கு மிகப் பெருமளவினதாக இருந்தது. 1987 இல் வெளிநாட்டுத்துறையின் முக்கிய பிரச்சினை வானிலைத் தன்மைகளால் பாதிக்கப்பட்ட வேளாண்மை உற்பத்தி விலை அதிகரிப்புக்களினால் ஏற்பட்ட முழு நன்மைகளையும் அனுபவிக்க இயலாமற் செய்தமையாகும். நீர்ப்பாசனத்திலும், நீர் மின்வலுவிலும் பெருமளவு முதலீடுகள் செய்யப்பட்டிருந்தும் இலங்கை தொடர்ந்தும் வானிலையின் நிச்சயமற்ற தன்மைகளினால் அதிகளவு தாக்கப்பட்டது. எண்ணெய் விலைகளின் எதிர்த்தாக்கம், படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் அதிகரிப்பு என்பவற்றால் வெளிநாட்டுத்துறை தொடர்ந்தும் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது. இப்பாதிப்புக்கள் எதிர்ப்பு நிறைந்த ஒரு சூழ்நிலையில் நியாயமான

வளர்ச்சி வீதத்தினைப் பேணுவதற்கு முயலும் குறுகிய அடிப்படையிலான வேளாண்மை வர்த்தகத்தில் தங்கியுள்ள பொருளாதாரத்தின் விரும்பத்தகாத உண்மை நிலையினைப் பிரதிபலிக்கின்றது. இவ்வாறு இலங்கைப் பொருளாதாரம் 1988 இலும் அதற்குப் பின்னரும் தடுக்க முடியாத ஒரு எதிர்ப்பினை எதிர்நோக்கியுள்ளது. இயற்கை மூலவளங்கள் அருமையாக உள்ளமையாலும் வேளாண்மைத் துறையின் வரையறைகள் காரணமாகவும் இலங்கை பெருமளவுக்குப் பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதார அமைப்பினை நோக்கிச் செல்ல வேண்டியது அவசிய மாகும். ஆனால் இவ்வாறு செய்கையில் குறுகிய ஏற்றுமதி அடிப்படையிலும் குறைந்தளவான உற்பத்தியைக் கொண்ட பெருமளவு அரசதுறையிலும் தங்கியிருக்கும் ஒரு பொருளாதாரத்திலிருந்து, ஏற்றுமதிசார் நடவடிக்கைகளையும் உற்பத்தி முயற்சிகளிலான முதலீட்டையும் பரந்த இயல்பாக கொண்ட ஒரு பொருளாதாரத்திற்கு இலங்கை மிகவும் கடினமான ஒரு மாற்றத்தினைச் செய்தல் வேண்டும். இவையே சுமுகமானதும் மிகவும் சமநிலையைக் கொண்டதுமான பொருளாதாரத்தினை நோக்காகக் கொண்ட அபிவிருத்தி உத்தியின் விரிவான தன்மையாகும்.

இறைத் தொழிற்பாடுகளைப் பொறுத்தவரையில் வரவு செலவுத்திட்டக் குறை குறைந்த அளவினதாக விளங்கிச் சிறு மேம்பாடு காணப்பட்டதுபோல் தோன்றினும் குறைந்த அளவிலான முதலீட்டு உட்பாய்ச்சல் காரணமாக 1987 ஆம் ஆண்டிலும் பணவீக்க நிதியிடல் தொடர்ந்தமை ஆழமான அமைப்பு ரீதியிலான பிரச்சனைகளை உருவாக்கின. உற்பத்தியில் ஏற்பட்ட பின்னடைவுகள் காரணமாகச் சில உணவுப் பொருட்களின் நிரம்பலில் தட்டுப்பாடுகள் ஏற்பட்டன. இத்துடன் பணநிரம்பலின் வளர்ச்சியில் காணப்பட்ட வேகமும் இணைந்து 1987 ஆம் ஆண்டின் இறுதி மாதங்களில் விலைகளில் பெருமளவு அதிகரிப்புக்களை ஏற்படுத்தின. பணவீக்கத் தாக்கங்களின் மீண்டெழும் தன்மை மிகுந்த கவனத்துடன் குறைக்கப்பட வேண்டும். இதனை அடையாவிடின் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை படிப்படியாகக் குறைவடையும். முதலீட்டிற்கும் உற்பத்திக்குமான ஊக்குவிப்புக்கள் பேணப்படவேண்டின் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதில், நாணயக் கொள்கையினைப் பொறுத்தவரையில் அதன் நடவடிக்கைச் சுதந்திரம் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். உண்மையில் எதிர்காலத்திற்கான நாணயக் கொள்கைக்கான அணுகுமுறை, மாறுபட்ட கருத்துக்களிடையே கவனமான சமப்படுத்தலினை வேண்டி நிற்கும். விலைகளின் நிலையான தன்மையைப் பேணுவதற்கு நாணயக் கொள்கை போதியளவு ஆதரவினை வழங்கும் வேளையில், முதலீட்டிலும் வளர்ச்சியிலும் பாதகமான சிக்கல்களை ஏற்படுத்தும் அளவுக்கதிகமான நாணயக் கட்டுப்பாடுகளைத்தவிர்த்தல் வேண்டும்.

1986 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை பேரண்டப் பொருளாதாரத்தில் உறுதியினைப் பேணுவதற்கு இறைக் கட்டுப்பாட்டினை ஓர் முற் தேவைப்பாடாகக் கவனத்திற் கொண்டது. பொருளாதார விரிவாக்கத்தினைத் தாங்குவதற்கு இது இன்றியமையாத தகுதியாகும். 1987 ஆம் ஆண்டிற்கான இறை அபிவிருத்திகள் இவ்விடயத்தைப் பொறுத்தவரை ஓர் இணக்கத் தன்மையினை வற்புறுத்தாத போதும் பொருளாதாரப் போக்கில் தொடர்ந்தும் பல சமனற்ற தன்மைகள் காணப்பட்டமையால், இறை ஒழுங்குகள் பற்றி மேலும் தீர்மானம் எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அண்மை ஆண்டுகளில் அரசின் அரசிறையினை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20 சதவீதமளவில் வைத்திருப்பதற்கான முயற்சிகளில் வெற்றி காணப்பட்டபோதும் அதிகரித்து வரும் நடைமுறைச்

செலவுகள் காரணமாக மொத்தப் பற்றுக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11 சதவீதமளவில் காணப்பட்டது. இப்பின்னணியில் பொருளாதாரத்தில் காணப்படும் அமைப்பு ரீதியிலான பலவீனங்களைத் திருத்துவதற்கு வேண்டிய வரவுசெலவுத்திட்ட, சென்மதி நிலுவைகளின் விரிவான எல்லை 1987 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட உரையில் எடுத்துரைக்கப்பட்டது. நடுத்தரக் கொள்கை அமைப்பில் 1987—1989 வரையான மூன்று ஆண்டு காலப் பகுதிக்கான கொள்கை அமைப்பு பேரண்டப் பொருளியல் உறுதித் தன்மையை நிலைநாட்டுவதனையும் அதன் மூலம் எதிர்கால வளர்ச்சி, சுய நம்பிக்கை என்பவற்றுக்கான வாய்ப்புக்களை மேம்படுத்தலையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தது. சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குக்குறை, வரவு செலவுத் திட்டக்குறை என்பவற்றுக்குச் சரியான இலக்குகள் ஏற்படுத்தப்பட்டன. இவ் இலக்குகளுக்கமைய வரவு செலவுத்திட்டக்குறை (நன்கொடைகளுக்கு முன்னர்) 1987 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11 சதவீதத்திலிருந்து 1989 இல் 9 சதவீதத்திற்குக் குறையும் எனவும், சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குக்குறை 1987 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7 சதவீதத்திலிருந்து 1989 இல் 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. இக்குறை பெருமளவு சலுகை அடிப்படையிலான வெளிநாட்டு மூல வளங்கள் மூலம் சமாளிக்கப்படக் கூடியதாகும்.

எனினும் ஒருபொழுதுமில்லாதவாறான வரட்சி நிலைமைகள் பாதுகாப்புச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு, மீள் கட்டடவாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட அதிகரித்த செலவினம் என்பன காரணமாக இறை, சென்மதி நிலுவை என்பவை திருத்தியமைக்கப்பட வேண்டியிருந்தன. இதற்கமைய 1988 வரவு செலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்ட 1987–1990 க்கான நடுத்தரக் கொள்கை அமைப்பில் 1987 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 21 சதவீதமாக மதிப்பிடப்பட்ட அரசின் அரசிறை 1988—1990 காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20.5 சதவீதமாக இருக்குமெனவும், இதேவேளையில் செலவினம் 1987 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 33 சதவீதத்திலிருந்து 1990 இல் 29.5 சதவீதத்திற்குப் படிப்படியாகக் குறையுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. இவ்வெல்லைக்குள் நடைமுறைச் செலவு/மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரம் 1987 இன் 20 சதவீதத்திலிருந்து 1988—1990 காலப்பகுதியில் 18 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது. மூலதனச் செலவினை 1988 இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 13 சதவீதத்திலிருந்து 1990 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 11.5 சதவீதமாகப் படிப்படியாகக் குறைப்பதன் மூலம் வரவு செலவுத் திட்டக் குறையினைக் குறைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ் இறைச் சீராக்கத்தின் அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்குக்குறை 1987 இன் 9 சதவீதத்திலிருந்து 1990 இல் 5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. புதிய கைத்தொழில் கொள்கை, ஏற்றுமதி ஊக்குவிப்பு, தனியார் மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் என்பவை மேற்கொள்ளப்பட்டதனைத் தொடர்ந்து ஏற்றுமதி இறக்குமதிப் பிரதியீட்டுத் துறையில் சென்மதி நிலுவை சீராக்கங்கள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியினைப் பெறுகின்றது. எப்படியிருப்பினும் அரசின் மூலதனச் செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பினால் உருவாக்கப்பட்ட மந்த நிலையினை ஈடுசெய்யக்கூடிய வகையில் தனியார்துறைக்கு ஊக்கமளிப்பதற்கு ஏற்ற நிலைமைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

அடுத்துவரும் பல ஆண்டுக் காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றுக் குறையைப் படிப்படியாகக் குறைப்பதன் மூலம் பெருந்தொகையான பேரண்டச் சீராக்கங்கள் ஏற்பட வேண்டும் என்பது கொள்கை அமைப்பு இலக்குகளின் அடிப்படை எடுகோளாக விளங்கியது. இதனுல் பிரச்சினையை அதன் முக்கிய மூலத்திலேயே அணுக முடியும். பற்றுக்குறையினைக் குறைக்கும் நடவடிக்கை முற்ருக நடைமுறைப்படுத்தப்படுதல் மிகவும் முக்கியமானதாகும். இலங்கை அதன் பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆராய்ந்து பொருளாதாரத்தில் காணப்படும் அமைப்பு ரீதியிலான சமமின்மைகளைச் சீராக்குதல் வேண்டும். உண்மையில் அமைப்பு ரீதியிலான சமமின்மையானது கிடைக்கக்கூடியதாக இருந்த மூலவளங்களைவிடக் குறிப்பிடத்தக்களவு அதிகமான செலவினத்தைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் அபிவிருத்தியினை அடைய முயன்றமையினுல் ஏற்பட்டதாகும் பணவீக்கமற்ற அடிப்படையில் பொருளாதாரம் தாங்கக்கூடியதனைவிட கூடிய வேகத்தில் உள்நாட்டுச் செலவு அதிகரிப்பதன் தவிர்க்கமுடியாத விளைவுகளாக சென்மதி நிலுவைப் பற்றுக் குறையும் விலைத் தாக்கமும் ஏற்படுகின்றன. போட்டிரீதியிலான மூலவளங்களுக்கான கேள்வியை இனங்கான வேண்டியுள்ள அதேவேளையில் பேரண்டச் சமநிலையைப் பேணுவதற்கான தேவையினையும் புறக்கணிக்கும் வகையில் இறைக்கொள்கை பராமுகமாக இருக்கக் கூடாது. நாடு எதிர்நோக்குகின்ற தடைகளை அடையாளங் காணுவதற்கான தூர நோக்கையும் நல்லெண்ணத்தையும் ஒழுங்கினையும் இலங்கை கொண்டிருக்க வேண்டுவதுடன் பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு ஒழுங்கான முறையில் எழும் இன்றியமையாத சீராக்கம் அனுமதிக்கும் விதத்தில் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள் பன்னுட்டு உதவிகளுடன் முன்னேற்றகரமான பொருளாதாரத்தை அமைக்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு நம்பிக்கையூட்டுவதில் மிகப் பெருமளவிற்கு உதவ வேண்டும்.